விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 069 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 14 சனிக்கிழமை (26.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=



## உக்ரைனில் தொடர்ந்து குண்டுமழை

# மும்முனையிலும் ரஷ்யா உக்கிர தாக்குதல்

- பல ஆயிரம் பொதுமக்கள் இறந்திருக்கலாம் என வெளிநாட்டு ஊடகங்கள் தகவல்
- 2,800 இற்கும் மேற்பட்ட ரஷ்ய வீரர்கள் கொல்லப்பட்டதாக உக்ரைன் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவிப்பு
- உக்ரைன் இராணுவ உடையில் உக்ரைன் தலைநகருக்குள் ஊடுருவிய ரஷ்ய படைகள்
- முதல்நாள் தாக்குதலில் 137 பொதுமக்கள் மற்றும் இராணுவம் உயிரிழந்ததாக உக்ரைன் அறிவிப்பு
- ரஷ்யாவை பாதுகாக்க உக்ரைன் நாட்டை நோக்கி படையெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என ரஷ்ய அதிபர் புடின் தெரிவிப்பு ( 15ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலை நிறுத்தினால் பேச்சுவார்த்தைக்கு தயார்

ரஷ்யா அறிவிப்பு

(மொஸ்கோ)

உக்ரைன் இராணுவம் தாக்குதலை நிறுத்தினால் பேச்சுவாத்தை நடத்த தயாராக உள்ளோம் என ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா தொடுத்துள்ள போரை தடுத்து நிறுத்த உலக நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று உக்ரைன் அதிபர் ஜெலன் 15

## கொழும்பிலுள்ள ரஷ்ய தூதரகத்தின் முன் உக்ரேனிய பிரஜைகள் ஆர்ப்பாட்டம்



03 ஆம் பக்கம் பார்க்க

# ஆட்சி அதிகாரத்தை கையில் எடுங்கள்

## உக்ரைன் இராணுவத்திற்கு ரஷ்ய அதிபர் புடின் அழைப்பு

(மொஸ்கோ)

**நாட்டின் ஆட்சி அதிகாரத்தை கையில் எடுக்குமாறு உக்ரைன் இராணுவத்தினருக்கு ரஷ்ய அதிபர் புடின் அழைப்பு விடுத்துள்ளார்.**

உக்ரைன் மீது ரஷ்ய படைகள் உக்கிரமான தாக்குதலை 2ஆவது நாளாக நடத்தி வருகிறது. வான்வழி, கடல்வழி மற்றும் தரைவழி என மும்முனை தாக்குதலை நடத்துவதால் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள் என. உக்ரைன் நாட்டின் ஏராளமான இராணுவ இலக்குகளை ரஷ்ய படைகள் தாக்கி அழித்துள்ளன. அதேபோல் உக்ரைன் தங்களை தற்காத்துக் கொள்ள, ரஷ்ய படைகளுக்கு பதிலடி கொடுத்து வருகிறது.

இந்நிலையில், உக்ரைன் நாட்டின் ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கையில் எடுக்க வேண்டும் என்று 15

## கொரோனா 26 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 26 கொரோனா மரணங்கள் உறுதிப்ப 15

# பயங்கரவாத சட்ட திருத்தம் மார்சில் சபையில் விவாதம்

## வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தில் அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ள நிலையில் மார்ச் முதல் வாரத்தில் இது குறித்து விவாதிக் கப்படவுள்ளதாக இலங்கை வெளிவிவகார 15

## நாட்டில் மேலும் +1,286 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியான மேலும் 1,286 பேர்நேற்று அடை 15

## பொறுப்பை நிறைவேற்ற இலங்கை தவறிவிட்டது

ஐ.நா ஆணையாளர் விசனம்

(ஜெனிவா)

இலங்கையின் கடந்த கால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை செயற்படுத்துவதில் உள்ள அசமந்தப் போக்கு தமது விசனத்திற்கு காரணமாக அமைந்துள்ளதென ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் 15

## வார இறுதி நாட்களில் இரவு நேர மின்வெட்டு அமுலாகாது

(கொழும்பு)

வார இறுதி நாட்களில் இரவு நேரங்க 15

## இந்திய உயர்ஸ்தானிகருடன் அமைச்சர் விமல் சந்திப்பு



(கொழும்பு)

அமைச்சர் விமல் வீரவன்சவுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுக்கும் இடையில் முக்கியமான 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நான் தப்பியோடவில்லை

## உக்ரைன் ஜனாதிபதி



(கீவ்) உக்ரைன் தலைநகர் கீவில் கடும் போர் நடந்து வரும் நிலையில், அந்நாட்டு ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, தலைநகரில் இருந்து தப்பிச் சென்றதாகக் கூறப்படும் வதந்திகளுக்கு மத்தியில் தான் தலைநகரில் இருப்பதாகக் கூறி காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

பாங்கோவா வீதியில் இருந்து அவர் பதிவு செய்த காணொளியில், உக்ரைனின் ஏனைய தலைவர்களுடன் ஜெலென்ஸ்கியும் இன்னும் நகரத்தில் இருப்பதாக குடிமக்களுக்கு உறுதியளிப்பதைக் காணலாம்.

மேலும், அவர் கீவில் இருந்து தப்பித்ததாகக் கூறப்படும் ரஷ்ய பிரசாரகர்களால் பரப்பப்பட்ட தவறான தகவலையும் அவர் மறுத்துள்ளார். (ம)

## லங்கா ஐஓசி எரிபொருள் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

லங்கா ஐஓசி தமது அனைத்து வகையான பெற்றோல் மற்றும் டீசலின் விலைகளை அதிகரிக்க தீர்மானித்துள்ளது.

நள்ளிரவு முதல் குறித்த விலை அதிகரிப்பு அமுலாகி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 20 ரூபாயினாலும் டீசல் லீற்றர் ஒன்றின் விலையை 15 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம)


## யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

### ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2022

காலம் - 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி
இடம் - கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
தலைமை - திரு.செ.ஜெயக்குமார் அவர்கள் (சங்கத் தலைவர்)

அனைத்து அங்கத்தவர்களையும் குறித்த நேரத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (C-3848)

செயலாளர்
க.செல்வச்சந்திரன்



## மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 04 . 1937
இறப்பு 25 . 02 . 2022

### தம்பையா சத்தியமூர்த்தி

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சத்தியமூர்த்தி நேற்று (25.02.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சத்தியவாணியின் (லண்டன்) பாசமிகு தந்தையும் சிவகுமாரின் (லண்டன்) அன்பு மாமனாரும் விஜயலட்ஷ்மி, காலஞ்சென்றவர்களான பரதராசா, யோகநாதன், தனலட்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நல்லூர் சங்கிலியன் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.10, சங்கிலியன் வீதி,
நல்லூர். (10382)

*தகவல்:*
சி.சத்தியவாணி (*மகள்*)



## 31ம் நினைவு நாளும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 27.01.2022 அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் கதிரவேலு தம்பித்துரை (வெள்ளை)

திதி: தேய்பிறை தசமி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 24.02.2022 வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 26.02.2022 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"பார்வதி இல்லம்"
வீரபத்திரர் வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். (10378)

குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்



பிறப்பு 13 . 11 . 1930
இறப்பு 22 . 02 . 2022

### Dr.பரமநாதன் விக்னேஷ்வரா

யாழ்.கொழும்புத்துறை சுவாமியார் வீதியை பிறப்பிடமாகவும் யாழ்.நீராவியடி பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் சுன்னாகம் புகழ் Dr.பரமநாதன் விக்னேஷ்வரா அவர்கள் 22.02.2022 அன்று சிட்னியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமநாதன் - தங்கரத்தினத்தின் அன்பு மகனும் தர்மலிங்கம் - மனோன்மணியின் மருமகனும் விமலாதேவியின் பாசமிகு கணவரும் அருணா, குமாரராஜன், அமுதன், ஐங்கரன், அகிலா, அரவிந்தன் ஆகியோரின் அன்பு அப்பாவும் நந்தகோபாலன், சுகன்யா, பத்மாவதி கஜந்தி, வதனன் ஆகியோரின் மாமனாரும் துளசி, அஞ்சன், அபிஷேக், கவியரன், சாலினி, யாழினி, விஷ்வன், யதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற ஆனந்தநாயகி - திருஞானசோதி, காலஞ்சென்ற கனகேஸ்வரி - இராஜலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஞானாம்பிகை, சிவஞானசம்பந்தன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை Magnolia Chapel Macquarie Park Cemetery and Crematorium இல் காலை 11 மணிமுதல் 2 மணிவரை நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

*தொடர்புகளுக்கு:*
குமாரராஜன் - 0402 874 156
அமுதன் - 0420 455 363
ஐங்கரன் - 0413459842
அரவிந்தன் - 0413 193 001
(C-3847)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் தொடர்பில் வெளிநாடுகள் அழுத்தம் தர தேவையில்லை

# ஜெயநாத் கொலம்பகே தெரிவிப்பு

(கொழும்பு)

**மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை மீது குற்றம் சுமத்தும் பல நாடுகள், கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.**



நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத் தொடருக்கான இலங்கையின் தயார்ப்படுத்தல் குறித்து, அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் விளக்கமளித்தபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகரின் இலங்கை தொடர்பான அறிக்கை எதிர்வரும் 3 ஆம் திகதி விவாதத்திற்கு உட்படுத்தப்படவுள்ளது.

இந்த நிலையில், ஜெனிவா கூட்டத்தொடர் குறித்து கருத்து தெரிவித்துள்ள வெளிவிவகார செயலாளர் ஜெயநாத் கொலம்பகே, எதனையும் செயற்படுத்த வேண்டும் என எந்தவொரு அரசாங்கமும், இந்த அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கத் தேவையில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தால் ஆற்றப்படும் நல்ல விடயங்களை ஏற்று அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதையே அவர்கள் செய்ய வேண்டும்.

மனித உரிமைகள் குறித்து பேசுவதற்கு முன்னர், மனிதன் ஒருவன் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவது முக்கியமாகும்.

இலங்கை மீது குற்றம் சுமத்தும் நாடுகளின் கடந்த இரண்டு தசாப்தகால செயற்பாடுகளைப் பார்த்தால், அவை மனித உரிமைகளை மீறி, வேறு நாடுகளை ஆக்கிரமித்து அந்த நாடுகளில் பெருமளவான உயிரிழப்புகளை ஏற்படுத்திய பல சந்தர்ப்பங்களைக் குறிப்பிட முடியும்.

இந்த நாட்டில், ஏதாவது முக்கியமான சில பிரச்சினைகள் இருக்குமாயின், நாட்டின் சமாதானத்திற்காக அது தொடர்பில் செயற்படுவோம்.

இந்த விடயத்தில், உரிய பிரதிபலனைப் பெற்றுக்கொள்ள தங்களுக்கு உதவுமாறு அனைத்து தரப்புகளிடமும் கூறுவதாக வெளிவிவகார செயலாளர் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். (நி)

# மின் தடையால் சுகாதாரத்துறை விரைவில் முடங்கும்

(கொழும்பு)

ஐந்து மணித்தியாலங்களுக்கு மின்தடை நீடிக்கப்பட்டுள்ளதாலும், எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு இல்லாமையாலும் சுகாதாரத் துறை விரைவில் முடங்கும் அபாயம் காணப்படுவதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம்



மருத்துவர் ஹேமந்த ஹேரத் எச்சரித்துள்ளார்.

சுகாதாரத் துறை தற்போது மருத்துவமனைகளில் இருக்கும் மின்பிறப்பாக்கிகள் மற்றும் பேக்கப் ஜெனரேட்டர்களையே பெரிதும் நம்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# தனியார் பேருந்து சேவைகள் முழுமையாக முடங்கும் அபாயம்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் எரிபொருள் பிரச்சினை காரணமாக, பல்வேறு துறைகளின் போக்குவரத்து பணிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதன்படி பயணிகள் பேருந்து சேவை மற்றும் பொருட்களை கொண்டு செல்வதற்கான சேவைகள் உட்பட பல சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான சூழ்நிலையில், 50 சதவீதத்திற்கும் அதிகமான பேருந்துகள் சேவையிலிருந்து விலகியுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இன்று முதல் பேருந்து சேவைகள் முழுமையாக முடங்கும் அபாயம் உள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ண தெரிவித்துள்ளார். (நி)

# பழைய முறையில் மாகாணசபைத் தேர்தல்

(கொழும்பு)

புதிய முறைமை கொண்டு வரப்படும் வரையில் பழைய முறையின் கீழ் மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டுமென தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் முறைமை மறுசீரமைப்பு தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு கூட்டத்தின் போது, இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக அக் குழுவின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். (நி)

# ஊழியர்களுக்கான காப்பீட்டுத்தொகை 20 இலட்சம் ரூபாவாக அதிகரிப்பு

(கொழும்பு)

பணியின்போது விபத்துக்களால் பாதிக்கப்படும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் அதிகபட்ச தொழிலாளர் இழப்பீட்டுத் தொகை 20 இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற தொழிலாளர் விவகாரம் தொடர்பான மேற்பார்வைக் குழுவின் கூட்டத்தில், இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பணியில் இருக்கும் போது விபத்துக்களால் பாதிக்கப்படும் ஊழியர்களுக்கு மரணம் அல்லது பூரண இயலாமை ஏற்பட்டால் வழங்கப்படும் அதிகபட்ச இழப்பீட்டுத் தொகை 550,000 ரூபாவாக காணப்பட்டது

இந்த நிலையில், குறித்த இழப்பீட்டுத் தொகை 20 இலட்சம் ரூபாய் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. (நி)

# வார இறுதியில் மின்வெட்டை தவிர்க்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் வார இறுதியில், இரவு வேளைகளில் மின்வெட்டை தவிர்க்குமாறு அல்லது குறைந்தபட்ச மின் வெட்டையேனும் விதிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை மின்சாரசபைக்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழு அறிவுறுத்தியுள்ளது.

நாடளாவிய ரீதியில் இடம்பெறும் அண்மைய மின்வெட்டுகளின் காரணமாக நுகர்வோர் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# கொழும்பிலுள்ள ரஷ்ய தூதரகத்திற்கு முன் உக்ரேய்னிய பிரஜைகள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள உக்ரேய்னிய சுற்றுலாப் பயணிகள் குழுவொன்று கொழும்பில் உள்ள ரஷ்யத் தூதரகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

உக்ரேய்ன் மீதான ஆக்கிரமிப்பை ரஷ்யா நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தே குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை குறிப்பிட்டு பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்ட உக்ரேய்னியர்கள் கோஷமிட்டு தமது எதிர்ப்பை வெளியிட்டனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருபா லேணர்ஸ்

කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- எழுத வாசிக்க முடியாதவர்களுக்கு விசேட வாய்மொழிப் பரீட்சை ஒழுங்கு செய்து தரப்படும்.
- விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- கனரக வாகனப் பயிற்சி.




"வீதிச்சட்டங்களை கடைப்பிடிப்போம். வாகன விபத்துக்களை தவிர்ப்போம்"

தலைமையகம்
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 0777 22 5292

(C-38851)

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 077 120 5576 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |


# மரண அறிவித்தல்

## திருநாவுக்கரசு பரமசிவம்



பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு பரமசிவம் அவர்கள் 25.02.2022 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தங்கராசா - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி பிரியதர்சினி மயூரதன் (குடும்ப நல உத்தியோகத்தர், பிரதேச வைத்தியசாலை - சங்கானை), குகப்பிரியன் (உரிமையாளர் - முத்துமாரி மருந்தகம், வழக்கம்பரை), தவப்பிரியன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான வரதராசா, அப்புத்துரை மற்றும் அன்னலட்சுமி, மல்லிகாதேவி, கனகபூரணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மயூரதனின் (மின் இணைப்பாளர்) அன்பு மாமனாரும் ஆதிகேஷன், ஆதித்தியன் ஆகியோரின் பேரனும் முருகப்பிள்ளை துரைராசாவின் (ஓய்வுபெற்ற அஞ்சலர் - வட்டுக்கோட்டை) அன்புச் சகலனும் திருமதி பாக்கியலட்சுமி துரைராசாவின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.02.2022) சனிக்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிழல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிரியதர்சினி 077 329 3238, குகப்பிரியன் 077 760 0469, தவப்பிரியன் 077 797 8487

(10384)

# ஆத்ம சாந்தி பிரார்த்தனையும்

## நன்றி நவிலலும்

கடந்த 16.01.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

## அமரர் தியாகராசா செல்வராணி



மானிப்பாய் மண்ணிலே வேரூன்றி
கோண்டாவில் தில்லையம்பதியிலே
கிளைவிட்டு ஆல தருவாகி,
பண்பின் இலக்கணமாம்
பாசமிகு கணவருடன்
காலமெல்லாம் கைகொடுத்து
கலகலப்புடன் கண்ணியமாய் வாழ்ந்து,
இல்லற வாழ்க்கையினை
இன்பமாய் கழித்து
ஈன்றெடுத்த பஞ்ச செல்வங்களை

பாரபட்சமின்றி பாலூட்டி
பக்குவமாய் தாலாட்டி, சீராட்டி
சிரமங்கள் மத்தியில் - எம்மை
சிரம் நிமிர வைத்து
பாரினிலே நாம் இன்று
பண்புடனே வாழ
பண்புடமை கற்பித்து
பார் போற்ற நாம் வாழ
பார்க்கும் உம் கண்கள்
ஓய்வெடுத்தது ஏனோ!

"உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்"

பிரிவுச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் பதாதைகள் வாயிலாகவும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலமும் மலர் வளையங்கள் சாத்தியும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவி புரிந்த எமது அன்புக்கு உரிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு : 27.02.2022 நாளை ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெறுகின்ற ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதமாக வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

தில்லையம்பதி
கோண்டாவில். 077 316 1399 (10383) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு லீற்றர் பால்

# 100 ரூபாவிற்கு கொள்வனவு

## ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

**பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து ஒரு லீற்றர் பாலை 100 ரூபாவுக்கு கொள்வனவு செய்யுமாறு ஜனாதிபதி அறிவுறுத்தல் விடுத்துள்ளார் என இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் தெரிவித்தார்.**

மில்கோ நிறுவனத்தில் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தபோதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து உள்ளூர் பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து பாலை 100 ரூபாவுக்கு கொள்வனவு செய்யும் திட்டம் நாளை முதல் அமுலுக்கு வரும் என இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் தெரிவித்தார். (நி)

# திருகோணமலையில் விபத்து இருவர் படுகாயம்



(திருமலை)

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் லொறியொன்றும், முச்சக்கரவண்டியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்து கந்தளாய் தள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கந்தளாய் நகரில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# மகளின் பட்டமளிப்பிற்கு சென்ற தந்தை விபத்தில் பலி

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் அக்மீமன பகுதியைச் சேர்ந்த 67 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விபத்தின் போது வாகனத்தில் குடும்ப உறுப்பினர்கள் 8 பேர் இருந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் பயணித்த மோட்டார் வாகனம் சீமெந்து ஏற்றப்பட்ட லொறியுடன் மோதி விபத்துக்கு உள்ளாகி உள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் வாகனத்தில் பயணம் செய்த 4 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தனது 29 வயதுடைய மகளின் மருத்துவ பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு திரும்பியபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)


விண்ணக வாழ்வில் 31 ஆம் நாள் நினைவஞ்சலி

34 ஆம் ஆண்டு நினைவு

அமரர். கார்த்திகேசு மகேஸ்வரி

மண்ணில் 14 . 08 . 1924 — விண்ணில் 27 . 01 . 2022

அமரர். சின்னத்தம்பி கார்த்திகேசு

(பிரதம லிகிதர்-றத்தோட்டை)

மண்ணில் 17 . 10 . 1905 — விண்ணில் 07 . 02 . 1988



இறைவனிடம் பல உறைவிடங்கள் உள்ளன அங்கே எமக்கு நிரந்தர உறைவிடம் உண்டு
அதனாலோ இறைவன் உங்களை அமைதியாக அழைத்துக் கொண்டார்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தங்கம் அகம்,
சூறாவத்தை, சுன்னாகம்.

(10354)

தகவல்:
குடும்பத்தினர்.


# இராசிபலன்

26.02.2022
மாசி 14, சனிக்கிழமை
தசமி முற்பகல் 9.12.மணிவரை

மூலம் முற்பகல் 9.12 மணிவரை
சுபநேரம் - 3.29- 4.59 மணிவரை
இராகுகாலம் -9.29-10.59 மணிவரை

சந்திராஷ்டமம்- ரோகினி

**வளவன்**

**மேஷம்** — இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** — தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**துலாம்** — சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடித்து முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்** — தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காணவேண்டிய நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**ரிஷபம்** — கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, வழிபாட்டால் சுகம் காணஶ்ரீஶ்ரீ வேண்டிய நாள்.

**சிம்மம்** — உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**விருச்சிகம்** — குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வாய்ப்புக்கள் உங்களை தேடி வரலாம், உங்களின் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வருவர்.

**கும்பம்** — தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், திடீர் பண வரவால் சந்தோசமடைவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொதுவாழ்வில் கௌரவம் கூடும்.

**மிதுனம்** — உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** — பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு** — ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்குறுதியை காப்பாற்றி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு என்னும் விதை முளைக்க அமைதி என்னும் மண் தேவை

## ஆண்டு விழாவும் சிவராத்திரி விழாவும்


(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் 67 ஆவது ஆண்டு விழாவும் சிவராத்திரி விழாவும் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் ஆலய மண்டபத்தில் சைவ சமய அபிவிருத்திக்கழக தலைவர் இரா.செல்வவடிவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

"சிவராத்திரி மகத்துவம்" என்னும் பொருளில் இளைப்பாறிய ஆசிரியர் பா.காசிநாதனின் சிறப்பு சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

மேலும் இவ்வாண்டு நடைபெற்ற நீதிநூல் மனைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வுடன், நாவலர் ஆண்டினையொட்டி பாடசாலை மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வினா விடை போட்டிக்கான கேள்விக் கொத்து வெளியீட்டு வைபவமும் இடம்பெறவுள்ளது. (4)





# யாழில் முகக்கவசம் இன்றி பயணிப்போருக்கு பி.சி.ஆர்

## சுகாதார தரப்பு அதிரடி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகமும் யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார பிரிவினரும் இணைந்து நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளில் அநாவசியமாக நிற்போர் வீதிகளில் முகக்கவசமின்றி பயணிப் போருக்கு பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணபொலிஸாரின்பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் வீதியில் தேவையற்று நடமாடுவோருக்கு பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப் படுகின்றது. (4-6-33-18-104)

## திறன் வகுப்பறை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் வளர்மதி முன்பள்ளியின் e-கல்வி திறன் வகுப்பறை திறப்புவிழா இன்று 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வளர்மதி நிறைவாழ்வகத்தின் தலைவர் ஆ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

## சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகத்தின் "உள்ளம்" காலாண்டு சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக வேலாயுதபிள்ளை அரங்கில் நடைபெறவுள்ளது. (4)

## கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள Zoom செயலி ஊடாக "யாவர்க்கும் நலம்" எனும் நிகழ்ச்சி தொடரானது வாராந்தம் சனிக்கிழமை தோறும் மாலை 7.00 மணி - 9.00 வரை இடம்பெறுகின்றது.

அந்தவகையில் இன்று "பெருந்தொற்றுக் காலத் திற்குப் பின்னரான கண் ஆரோக்கியம்" எனும் தலைப்பில் கலந்துரையாடப் படவுள்ளது. எனவே இவ் நிகழ்ச்சியில் அனைவரும் பங்கேற்று பயன் பெறு மாறு வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கலந்துகொள்வதற் கான Meeting ID: 899 8528 2023 Pass code: 354485 ஆகும். (4)

## இலவச தொழிற்பயிற்சி பாடநெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப்பிரிவினால் 2022 ஆம் ஆண்டிற்கான இலவச தையல், கணனி தொழிற் பயிற்சிப் பாடநெறிகள் 07.03.2022 ஆம் திகதி கோப்பாய் மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள முறைசாராக் கல்விப் பிரிவு தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே இத்தொழிற் பயிற்சிப் பாடநெறியில் பாடசாலைக் கல்வியினை பெறத் தவறிய மாணவர்களும் தொழில் வாய்ப்பினை எதிர்பார்த்திருக்கும் அனைவரும் இணைந்து கற்க முடியும் என்பதுடன் இதற்கான அனுமதியினை முறைசாராக் கல்விப் பிரிவு தொழிற் பயிற்சி நிலையம், கோப்பாய் மகாவித்தியாலயம் கோப்பாய் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (4)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)


இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் தென்மராட்சி மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ ந.மகேஸ்வரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம் பெறவுள்ளது. (4-6)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நவாலி திருவருள் மிகு ஸ்ரீ நாகராஜா ராஜேஸ்வரி அம்பாள் ஆலயவருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபை தலைவர் யோ.கேசவகுமாரன் அறிவித்துள்ளார். (4)



இந்து சமய ,கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அருகிவரும் சைவ பாரம்பரிய மரபுரிமை நூல்களின் சித்தார்ந்த பதிப்புகளின் பறைசாற்றும் வாழ்வியல் கோலப்புத்தகங்களின் விற்பனைக்கண்காட்சி நேற்று யாழ் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வினை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,யாழ்.துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி .எழிலரசி அன்டன் ஆகியோர்கள் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தனர். (படங்கள்:- கஜிந்தன்.ரவிசாந்தன்)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப்பிரிவின் தையல் பயிற்சிப் போதனாசிரியர்களுக்கான (தற்காலிகம்) விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

தையல் போதனாசிரியர்கள் NVQ தொழிற் தகைமை சான்றிதழ்களை பெற்றுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும். தாங்கள் சுயமாக தயாரித்த விண்ணப்பப் படிவத்தினை கல்வி அபிவிருத்திப் பிரிவு, வலயக்கல்வி அலுவலகம், செம்மணி வீதி , நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் 03.03. 2022 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ். வலயக கல்வி பணிப்பாளர் எம்.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (4)

## வடமராட்சி கடற்பரப்பில் கரையொதுங்கிய படகுப்பாதை



(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி பொலிகண்டி பகுதியில் படகு பாதை ஒன்று நேற்று கரை ஒதுங்கியுள்ளது.

குறித்த படகு பாதை வாகனங்கள் போன்ற பாரமான பொருட்களை ஏற்றி இறக்குவதற்காக பயன்படுத்தப்படுவதாகும். இப் படகு எவ்வாறு கரை ஒதுங்கியது என்பது தொடர்பில் பொலிஸார் உட்பட பாதுகாப்பு தரப்பு தற்போது பல கோணங்களிலும் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-60)

## ஆலய காணிகளை பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

சங்கானை பிரதேச செயலாளர் பிரிவினுள் இந்திய கோயில்கள் மற்றும் மடங்களுக்குரிய காணிகள், இலங்கை கோயில்கள் மற்றும் மடங்களுக்குரிய காணிகளின் உரித்துடையோர்/ குடியிருப்போர் தங்களது காணி விபரங்களை 28.02.2022 தொடக்கம் 03.03. 2022 முன்னர் கோரிக்கைகள் அல்லது ஆவணங்களை அல்லது தத்துவ உரித்துக்கள் இருப்பின் நேரடியாக பிரதேச செயலகத்திற்கு சமூகமளித்து பதிவுகளை மேற்கொள்ளவும். மேலும் காணி தொடர்பான பிணக்குகள் அத்துமீறிய

அபகரிப்புக்களை தடுப்பதற்கு ஏதுவாக இந்த வாய்ப்பை பயன்படுத்தி தவறாது தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு சங்கானைப் பிரதேச செயலாளர் திருமதி பி.பிறேமினி அறிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதியர் சங்கம்

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட தொடர்ந்தும் தடைவிதித்தது நீதிமன்றம்

(கொழும்பு)

அரச தாதியர் சங்கத்திற்கு எதிர்வரும் மார்ச் 11ஆம் திகதி வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுதற்கு தொடர்ந்தும் தடைவிதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரச தாதியர் சங்கம் மேற்கொண்டிருந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை உடனடியாக இடைநிறுத்த உத்தரவு பிறப்பிக்கக் கோரி அரச தாதியர் சங்கம் மற்றும் அதன் தலைவர் சமன் ரத்னபிரிய ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர், வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இதனையடுத்து, அரச தாதியர் சங்கம் மேற்கொண்டிருந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதை தடுக்கும் வகையில் கடந்த 10ஆம் திகதி நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சரத்வீரசேகரவின்

## பாதுகாப்பு அதிகாரி மீது வாள்வெட்டு தாக்குதல்

(கொழும்பு)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் வாள் வெட்டு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

படுகாயமடைந்த நிலையில் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உதவி பொலிஸ் அத்தியட்சகரை வாளால்வெட்டியதாக கூறப்படும் நபர் சம்பவத்தை அடுத்து தப்பிச் சென்றுள்ளார். (நி)

# சர்வதேச சந்தையில்

## எரிபொருள் விலை மீண்டும் அதிகரிப்பு

(வோஷிங்டன்)

**உக்ரேய்ன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை அடுத்து சர்வதேச விநியோக சங்கிலியில் பாதிப்பு ஏற்படலாம் என்ற அச்சத்துக்கு மத்தியில் எரிபொருட்களின் விலை உலக சந்தையில் நேற்று வெள்ளிக்கிழமை மீண்டும் கிட்டத்தட்ட 3% அதிகரித்துள்ளது.**

ப்ரெண்ட் கச்சா எண்ணெய் நேற்று வெள்ளிக்கிழமை ஜி.எம்.ரி. நேரம் 0738 (GMT 0738) அளவில் பரல் ஒன்றுக்கு $101.87 ஆக அதிகரித்தது.

அமெரிக்காவின் வெஸ்ட் டெக்சாஸ் இன்டர்மீடியட் (WTI) கச்சா எண்ணெய் அதிகபட்சமாக $95.64 ஐ தொட்டது.

உக்ரேய்ன் மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை 2014 க்குப்

பின்னர் முதல் முறையாக கச்சா எண்ணெய் ஒரு பரல் 100 டொலராக அதிகரித்தது.

நிலம், கடல் மற்றும் வான் வழியாக ரஷ்யா உக்ரேய்ன் மீது பெரும் போரைத் தொடுத்துள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஒரு ஐரோப்பிய அரசின் மீதான மிகப் பெரிய தாக்குதலாக இது அமைந்துள்ளது. இந்தப் போரால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் சர்வதேச அளவில் விநியோகச் சங்கிலிகள் முடங்கலாம் என்ற அச்சம் காரணமாக எரிபொருள் விலை மீண்டும் மீண்டும் அதிகரித்து வருகிறது. (நி)

# வலுக்கும் ரஷ்யா - உக்ரேய்ன் மோதல் கவலையடைவதாக இலங்கை அறிக்கை

(கொழும்பு)

ரஷ்யா - உக்ரேய்னுக்கிடையிலான மோதல் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

ரஷ்யாவின் நடவடிக்கைகளுக்கு பல சர்வதேச நாடுகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், உக்ரேய்னில் வன்முறைகள் அதிகரிப்பது தொடர்பில் இலங்கை அரசாங்கம் மிகுந்த கவலையடைவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை பேணுவதற்கு நிதானத்துடன் செயற்பட வேண்டுமெனவும் பகைமையை உடனடியாக முடிவிற்குக் கொண்டுவர வேண்டுமெனவும் ரஷ்யா மற்றும் உக்ரேய்ன் தரப்பினரிடம் இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது. (நி)

# வவுனியாவில் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் மக்கள்



(நெளுக்குளம்)

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் வவுனியாவில் உள்ள எரிபொருள் நிலையங்களை சூழ வாகனங்கள் அணிவகுத்து நிற்பதுடன், அதிகளவு தூரம் வரை எரிபொருள் நிரப்புவதற்கு மக்கள் வரிசை நீடிப்பதையும் அவதானிக்க முடிந்தது.

அத்தோடு எரிபொருளை கொள்வனவு செய்யும் போது ஒவ்வொருவருக்கும் மிகக் குறைந்த அளவிலேயே எரிபொருளை பெற்றுக்கொள்ளுமாறு எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் கட்டுப்பாடுகளை விதித்து வழங்கி வருவதாகவும் எரிபொருளுக்காக காத்திருக்கும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (4-6-299)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1989 கிறிஸ்தவம் (NRC)<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: இறையியல் பட்டதாரி Pricst கிறிஸ்தவ சமய குரு<br>எதிர்பார்ப்பு: தனியார் அரச தொழில் வைத்தியர் வங்கியாளர்<br>தொ.இ: B/12345 | பிறப்பு: 1996இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: சூரி10 செவ் 7இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: B.com, HRM , Masters, Customer service executive , அரச தொழில்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும் அவுஸ்ரேலியா விரும்பத்தக்கது<br>தொ.இ:G/9128 |
| பிறப்பு: 1990இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: சூரி 2 செவ் 11 இல்<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்:அரச கட்டட மேற்பார்வை யாளர்<br>எதிர்பார்ப்பு :அரசதொழில் ஆசிரியர் விரும பத்தக்கது உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12346 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>கி.பா:40சூரி 12செவ் 9இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BAபட்டதாரி<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,வெளிநாடு,கனடா, அவுஸ்திரேலியா, லண்டன்<br>தொ.இ:G/9135 |
| பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்:பூரம்<br>கி.பா : 23 ½சூரி 4 செவ் 4இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் (ரெலிக்கோம்)<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12347 | பிறப்பு:1990இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 46 சூரி 8 செவ் 5இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:A/Lஎதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/9167 |
| பிறப்பு:1980இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா:26 சூரி 11 செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L கமம்எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் சைவபோசணம்<br>தொ.இ: B/12348 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 79சூரி 12செவ் 1 இல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்: வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/9183 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்



பேராதனை பல்கலைக்கழகத்தில் 23.02.2022 அன்று நடைபெற்ற பொதுப் பட்டமளிப்பு விழாவில் மருத்துவ பௌதீக துறையில் முதுமாணி (M.Sc in Medical Physics) பட்டம் பெற்ற

திருமதி. சயித்தா சுரேரஞ்சன்

(மருத்துவ பௌதீகவியலாளர்-இலங்கை விஞ்ஞான சேவை)


அவர்கள் கல்வித்துறையில் மேலும் சிறப்புப் பட்டங்கள் பெற்றுக் கொள்ள எல்லாம் வல்ல இறை ஆசியோடு பாராட்டி வாழ்த்துகின்றோம் (C-3849)

வாழ்த்துவோர்:
வடமராட்சி ஊடகத் துறையினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நெருக்கடியான தருணத்தில் புடினை சந்தித்த இம்ரான்கான்



(மொஸ்கோ)

ரஷ்ய படைகள், உக்ரேய்ன் நாட்டுக்குள் நுழைந்துள்ள இந்த நெருக்கடியான தருணத்தில் ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்தித்துப் பேசும் முதல் உலகத்தலைவர் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான்தான்.

உலக நாடுகளின் கவனம் எல்லாம் உக்ரேய்ன் ரஷ்யா மீது திரும்பி உள்ளது. ரஷ்யா போரைத் தவிர்க்குமா என்ற தவிப்பு உச்சத்தில் உள்ள போது கடந்த புதன்கிழமை பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் 2 நாள் அரசுமுறைப் பயணமாக ரஷ்யாவுக்கு புறப்பட்டுச் சென்றார்.

23 ஆண்டுகளுக்கு பிறகு பாகிஸ்தான் பிரதமர் ஒருவர், ரஷ்யா சென்றிருப்பது இதுவே முதல் முறை ஆகும். (நி)

## 'போர் வேண்டாம்' ரஷ்யாவில் போராட்டம் 1,600 பேர் கைது

(மொஸ்கோ)

உக்ரேய்ன் மீதான ரஷ்யாவின் போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து ரஷ்யாவின் பல நகரங்களில் நேற்று முன்தினம் போராட்டங்கள் இடம் பெற்றன. இந்தப் போராட்டங்களில்ஈடுபட்ட 1,600 இற்குமேற்பட்டவர்கள் ரஷ்ய பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தலைநகர் மொஸ்கோ மற்றும் சென்.பீட்டர்ஸ்பர்க், யெகாடெரின்பர்க் உள்ளிட்ட 53 நகரங்களில் நடந்த பேரணிகளில் பல நூற்றுக்கணக் கான ரஷ்யர்கள் திரண்டு போருக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு சிறையில் அடைக்கப்பட்ட ரஷ்ய அரசின் விமர்சகர் அலெக்ஸி நவல்னியின்ஆதரவாளர்களின்போராட்டங்களை ஒடுக்கிய பின்னர், மிகப் பெரும் அளவில் ரஷ்யாவில் நடைபெற்ற அரச எதிர்ப்பு போராட்டமாக இது அமைந்திருந்தது. (நி)

## உக்ரே... விரை... உளவுத்...

(மொஸ்கோ)

உக்ரேய்ன் தலைந... படைகள் கைப்பற்... உளவுத்துறை அதிக...

ரஷ்ய துருப்புக்கள் டினீப்பர் ஆற்றின் இருபுறமும் உக்ரேய்னை நோக்கி முன்னேறி வருகின்றன. அவர்கள் தலைநகரைக் கைப்பற்றத் தயாராக இருப்பதாகவும்

## நாங்கள் தனித்து விடப்பட்டுள்ளோம்

### உக்ரேய்ன் ஜனாதிபதி உருக்கம்

(கீவ்)

ரஷ்யாவுக்கு எதிரான போரில் தாங்கள் தனித்து விடப்பட்டுள்ளதாக உக்ரேய்ன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி உருக்கமுடன் தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராணுவ நிலைகளை தாக்குவதாக கூறும் ரஷ்யா, உக்ரேய்ன் மக்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இது தவறானது மற்றும் ஒருபோதும் மன்னிக்க முடியாதது என உக்ரேய்ன் அரசு தெரிவித்துள்ளது.

மேலும், ரஷ்ய படைகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க அனைத்துத் தரப்பு மக்களும் முன்வர வேண்டும் ரஷ்யபடைகளுக்கு எதிராக களமிறங்கும் அனைவருக்கும் ஆயுதங்கள் வழங்கப்படும் எனவும் உக்ரேய்ன் ஜனாதிபதி அறிவித்துள்ளார். (நி)

## ரஷ்யப் படையெடுப்பின் முதல் நாளில் 137 பேர் பலி

(கீவ்)

ரஷ்ய படையெடுப்பின் முதல் நாளில் 137 பொதுமக்கள் மற்றும் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக உக்ரேய்ன் ஜனா திபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். அத்துடன் 316 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

## உக்ரேய்ன் தலை...

(கீவ்)

ரஷ்யா படையெடுப்பால் உக்ரேய்ன் தலைநகர் கீவ்-வில் கடும் போர்ப் பதற்றம் காணப்படுகிறது. இதையடுத்து போர்க்கால அவசர நடவடிக்கையாக கீவ் நகரம் முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்

## அடைக்கலம் தேடிப் போலந்திற்கு செல்லும் உக்ரேய்னியர்கள்



(வார்சா)

ரஷ்யாவின் படையெடுப்பால் உக்ரேய்னில் இருந்து அண்டை நாடான போலந்துக்கு ஏராளமானோர் அடைக்கலம் தேடிச் செல்கின்றனர்.

உக்ரேய்னில் உள்ள இராணுவத் தளங்கள், அரசு கட்டமைப்புகள் மீது ரஷ்யா நேற்றுத் தாக்குதல் நடத்தியது. பொதுமக்கள் குடியிருப்புகளிலும் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனால் அச்சமடைந்த மக்கள் கார்களிலும் மற்ற வாகனங்களிலும் புறப்பட்டு மேற்கில் உள்ள அண்டை நாடான போலந்துக்கு அடைக்கலம் தேடிச் செல்கின்றனர்.

எல்லை தாண்டி வரும் உக்ரேய்னியர்களைத் தங்க வைக்கப் போலந்தில் தற்காலிகத் தங்கு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. (நி)

## உக்ரேய்னின் அணுமின் நிலையத்தை கைப்பற்றிய ரஷ்யப் படை

(கீவ்)

உக்ரேய்னின் செர்னோபில் (Chernobyl) அணுமின் நிலையத்தை ரஷ்ய இராணுவப் படைகள் கைப்பற்றியுள்ளதாக உக்ரேய்ன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

1986 இல் செர்னோபில் அணுமின் நிலைய வெடிப்பு மனித வரலாற்றில் மிக மோசமான அணுசக்தி பேரழிவிற்கு வழிவகுத்தது. இதனால் பாரிய உயிர்ச்சேதம் மற்றும் பொருட் சேதங்களும் ஏற்பட்டிருந்தன.

ரஷ்யா தனது படையெடுப்பை தொடர்ந்தால் மீண்டும் இதுபோன்ற பேரழிவு ஏற்படும் என உக்ரேய்ன் ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.



அந்த இடத்தில் "மற்றொரு சுற்றுச்சூழல் பேரழிவு" ஏற்பட வாய்ப்புள்ளதாக உக்ரேய்ன்வெளியுறவு அமைச்சகமும் எச்சரித்துள்ளது.

இதேவேளை ரஷ்ய படைகள் நடத்திய தாக்குதலில் செர்னோபில் அணுமின் நிலைய கழிவு பாதுகாப்பு பகுதியில் இருந்து கதிர்வீச்சு அதிகரித்துள்ளதாகவும் உக்ரேய்ன் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (நி)

## செர்னோபிலை கைப்பற்றியது ரஷ்யா

(மொஸ்கோ)

உக்ரேய்ன் தலைநகர் கீவ் அருகில் உள்ள செர்னோபி... கடும் சண்டைக்குப் பின் ரஷ்யப் படைகள் கைப்பற்றியதாக... தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு




# ரேய்ன் தலைநகர் 'கீவ்' ரவில் ரஷ்யா வசமாகும்

## புத் துறை தகவல்

**லைநகர் கீவ்-வை விரைவில் ரஷ்யப் பற்றும் என சிரேஷ்ட மேற்கத்திய திகாரி ஒருவர் தெரிவித்தார்.**

அந்த அதிகாரி கூறினார்.

ரஷ்ய இராணுவம் உக்ரேய்னில் பல விமான நிலையங்களை கைப்பற்றி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. இதனால் உக்ரேய்னுக்குள் அதிக ரஷ்யப் படைகளை அனுப்புவது இலகுவாகி உள்ளது எனவும் அந்த அதிகாரி சுட்டிக் காட்டினார்.



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உக்ரேய்ன் முழுவதையும் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது.

உக்ரேய்னைக் கைப்பற்றி, தற்போது உள்ள அரசாங்கத்தை அகற்றி, ரஷ்யா சார்பு பொம்மை அரசொன்றை நிறுவுவதே ரஷ்யாவின் நோக்கம் எனவும் அவதானிகள் கூறுகின்றனர்.

இருப்பினும் இராணுவ நடவடிக்கைகள் இதுவரை நாட்டின் கிழக்கு, தெற்கு மற்றும் தலைநகரை மையமாகக் கொண்டே இடம்பெற்று வருகின்றன.

சுமார் 3 மில்லியன் மக்கள் வசிக்கும் கீவ் நகரம் ரஷ்யர்கள் கட்டுப்பாட்டில் வந்தால் அங்கு தீவிர வன்முறைகள் நிகழக்கூடும் எனவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. இதேவேளை, உக்ரேய்னில் 11 விமானத் தளங்கள், 3 கட்டளை மையங்கள், ஒரு கடற்படைத் தளம் மற்றும் 18 ராடர் நிலையங்கள் உட்பட 74 படைத்தளங்களை அழித்துள்ளதாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

## லைநகரில் ஊரடங்கு அமுல்

ளதாக அம்மாகாண மேயர் அறிவித்துள்ளார். நிர்வாகம், இராணுவ நடவடிக்கை மற்றும் சட்ட அமுலாக்கம் ஆகியவற்றை ஒருங்கிணைக்க கட்டுப்பாடடு மையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு உத்தரவின்போது பொது போக்குவரத்து இயங்காது என்றும் மெட்ரோ நிலையங்களை தங்குமிடங்களாக பொதுமக்கள் 24 மணி நேரமும் பயன்படுத்தலாம் என்று அவர் தெரிவித்துள்ளார். (நி)

## 'கீவ்' விமான நிலையத்தை மீண்டும் தனதாக்கியது உக்ரேய்ன்

(கீவ்)

ரஷ்யாவுக்கு எதிராக முழு இராணுவத்தையும் திரட்டும் பணிகளை விரைந்து முடிக்கும்படி இராணுவ அதிகாரிகளுக்கு உக்ரேய்ன் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

உக்ரேய்ன் நாட்டின் மீது ரஷ்யா தொடுத்த போர் காரணமாக உக்ரேய்ன் நிலைகுலைந்து போய் உள்ளது.

ஆனாலும் ரஷ்யாவின் தாக்குதலுக்கு உக்ரேய்னும் பதிலடி தாக்குதல் நடத்தி வருகிறது. ரஷ்யாவின் 2 ஹெலிகொப்டர்களை உக்ரேய்ன்படையினர் வீழ்த்தினர். 2 ரஷ்ய துருப்புகளை உக்ரேய்ன் இராணுவம் சிறைப்பிடித்துள்ளது.

இந்நிலையில், ரஷ்யாவிடம் இருந்து கீவ் விமான நிலையத்தை மீண்டும் கைப்பற்றி உள்ளதாக உக்ரேய்ன் அரசு அறிவித்துள்ளது.

மேலும், ரஷ்யாவுக்கு எதிராக முழு இராணுவத்தையும் திரட்டும் பணிகளை விரைந்து முடிக்கும்படி இராணுவ அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். (நி)

### புதிய பொருளாதாரத் தடை

## ரஷ்யா மீது விதித்தது ஐரோப்பிய ஆணையம்

(பிரஸ்ஸல்ஸ்)

ரஷ்யா மீது விரிவான புதிய பொருளாதாரத் தடைகளை, ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் வெளியிட்டுள்ளார்.

பொருளாதாரத் துறை, எரிசக்தி, போக்குவரத்து மற்றும் ரஷ்ய உயரடுக்கிற்கான விசாக்கள் உள்ளிட்ட பகுதிகளை இலக்காகக் கொண்டிருக்கும் பொருளாதாரத் தடைகள், பிரஸ்ஸல்ஸில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வெளியிட்டார்.

ரஷ்யாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பத்தை அல்லது விமானங்களுக்கான உதிரப் பாகங்களை வாங்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

'அங்கீகரிக்கப்பட்ட பாரிய மற்றும் இலக்கு பொருளாதாரத் தடைகளின் தொகுப்பு ஐரோப்பிய ஒன்றியம் எவ்வளவு ஒன்றுபட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது' என்றும் அவர் டுவிட் செய்தார்.

இதனிடையே, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், உக்ரேய்னுக்கு 300 மில்லியன் யூரோக்கள் உதவியும், இராணுவ உபகரணங்களும் வழங்கப்படும் என உறுதியளித்தார். (நி)

## உக்ரேய்ன் உளவுத்துறை மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்



(கீவ்)

மத்திய கீவ்வில் உள்ள உக்ரேய்ன் பாதுகாப்பு உளவுத்துறை தலைமையகத்தின் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது.

பாதுகாப்பு உளவுத்துறை தலைமையகக் கட்டடத்தில் இருந்து கறுப்புப் புகை எழுவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரஷ்யா தனது இராணுவ நடவடிக்கையைத் தொடங்கிய பின்னர், நேற்றுக் காலை ரஷ்ய ஏவுகணைத் தாக்குதல்களால் அதன் இராணுவக்கட்டளை மையங்கள் சில தாக்கப்பட்டதாக உக்ரேய்ன் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் எரிபொருள் தட்டுப்பாடு

# போக்குவரத்து சேவைகள் முடக்கம்

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை முதல் எரிபொருள் நிலையங்களில்பெற்றோல்இன்மையால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இன்மையால் வாகன உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். அதேநேரம் போக்குவரத்து சேவைகளும் முடக்கமடைந்துள்ளன. அரச அலுவலகங்களில் கடமையாற்றும் அதிகாரிகளும் பெற்றோல் இன்மையால் பாரிய சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். (4)

# வவுனியாவில் உறவுகள் கவனயீர்ப்பு போராட்டம்



(நெளுக்குளம்)

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நேற்று முன்தினம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஐந்து வருட பூர்த்தியை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் போராட்ட பந்தலிற்கு முன்பாக குறித்த போராட்டமானது இடம்பெற்றது.

இதன்போது காணாமல் போன உறவுகளின் படங்களை ஏந்தியவாறும் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கொடிகளை ஏந்தியவாறும் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர். (4-6-299)

# உயிருக்குப் போராடும் காட்டு யானை



(மன்னார்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட நெல்லிமுறிப்பு குளத்தில் காட்டு யானை ஒன்று நடக்க முடியாத நிலையில் விழுந்து உயிருக்குப் போராடி வருகின்றது.

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக குறித்த காட்டு யானை பாதிக்கப்பட்ட நிலையில் குறித்த பகுதிக்கு வருகைதந்து குளத்தில் வீழ்ந்த நிலையில் கடந்த 18 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினால் சிகிச்சையளிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த குளக்கரைப் பகுதியில் எழும்பி நடக்க முடியாத நிலையில் யானை தண்ணீரில் வீழ்ந்துள்ளது.

யானைக்கான சிகிச்சையளிக்கும் நடவடிக்கையில் வனஜீவராசிகள் திணைக்கத்தினர் ஈடுபடவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (4-6-285)

# கசிப்புடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில் நேற்று மோட்டார் சைக்கிளில் ஒருவர் கசிப்பினைக் கொண்டு சென்ற வேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் இருந்து 45 லீற்றர் கசிப்பினை பொலிஸார் பறிமுதல் செய்ததுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (4-6-316)

# மாடு குறுக்கே சென்றதால் நேர்ந்த கதி

(கண்டாவளை)

கிளிநொச்சி பளை ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியின் முல்லையடி பகுதியில் ஒருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது வீதியின் குறுக்கே மாடு சென்றதால் மாட்டுடன் மோதி குறித்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-315)

# குறைந்த விலையில் மீன்கள் கொள்வனவு

## நன்னீர் மீனவர்கள் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வரும் 19 வரையான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளடங்கலாக நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தற்போது பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளமாக அமைந்துள்ள இரணைமடு குளத்தின் கீழ் சுமார் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் ஏறத்தாழ இருபத்தோராயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதுடன் 19 வரையான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளடங்கலாக நூற்றுக்கும் மேற்பட்ட நன்னீர் மீன்பிடி தொழிலாளர்கள் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தொழிலுக்கு பயன்படுத்தப்படும் மீன்பிடி வலைகள் முதலைகளால் சேதப்படுத்தப்பட்டு வருவதாகவும் தற்போதைய சீரற்ற காலநிலையினால் தொழில்களும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளதுடன் சந்தபுரம் பிரதேசத்தில் இருந்து குளத்துக்கு செல்லும் வீதியில் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் மற்றும் காட்டு விலங்குகளின் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தற்போது பொருட்களின் விலையேற்றம் மற்றும் பொருட்களின் தட்டுப்பாடுகளினால் விலை அதிகரித்து இருக்கின்றபோதும் தங்களிடமிருந்து குறைந்த விலைகளில் மீன்கள் கொள்வனவு செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். (4-6-315)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 240 | 160 | 170 | 240 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 400 | 400 |
| தக்காளி | 230 | 200 | 200 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 80 | 60 |
| கோவா | 100 | 120 | 140 | 140 |
| கரட் | 350 | 450 | 400 | 400 |
| பூசணி | 140 | 140 | 140 | 160 |
| புடோல் | 200 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 140 | 100-300 | 240 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 160 | 160 |
| பாகற்காய் | 250 | 350 | 250 | 400 |
| வெண்டிக்காய் | 180 | 220 | 170 | 300 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 120 | 140 |
| பயற்றங்காய் | 400 | 200 | 200 | 300 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 | 150 |
| பீற்றூட் | 100 | 200 | 180 | 220 |
| கறிமிளகாய் | 400 | 300 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 1000 | 1200 | 1000 | 1200 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 100 | -- | 220 |
| கீரை - 1 பிடி | 100 | 90 | 60 | 100 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-80 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 140 | 80 | 140 | 240 |
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | -- | 110 | 80 | -- |

## இந்திய மீனவர்களை

# எதிர்வரும் திங்கள் மன்றில் முற்படுத்துமாறு உத்தரவு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 12 மீனவர்களையும் நாளை மறுதினம் திங்கட்கிழமை மன்றில் முன்னிலைப்படுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் கடந்த 13 ஆம் திகதி எல்லை தாண்டிய நிலையில் மீன் பிடித்துக்கொண்டிருந்த 12 இந்திய மீனவர்களையும் அவர்களின் இரண்டு படகுகளையும் கைது செய்த கடற்படையினர் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து குறித்த 12 இந்திய மீனவர்களும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் எஸ்.பாலசுப்ரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். மீண்டும் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதவான் எஸ். லெனின் குமார் முன்னிலையில் குறித்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது நாளை மறுதினம் திங்கட்கிழமை குறித்த இந்திய மீனவர்களை மன்றில் முன்னிலைப்படுத்துமாறும் அன்றைய தினம் குறித்த இரண்டு வழக்குகளுக் [illegible] இடப்பட்டது. (4-6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் வெட்டால் நீர் விநியோகம் பாதிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தற்போது அமுல்படுத்தப்படும் மின் வெட்டு காரணமாக நீர் விநியோகத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதென தேசிய நீர் வழங்கல் சேவையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய மின் வெட்டு காரணமாக பிரதேச நீர் விநியோகத்தில் குறைந்த அழுத்த நிலைமை ஏற்படக்கூடும் என அந்தச் சங்கத்தின் இணைச் செயலாளர் உபாலி ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி)

# பசிலின் இந்திய பயணம் மீண்டும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இந்தியப் பயணம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவினால் வழங்கப்படும் நிதியுதவி தொடர்பான ஒப்பந்தங்களை இறுதி செய்வதற்காக நேற்று அவர் இந்தியாவிற்கு விஜயம் செய்வார் என முன்னதாக அறிவிக்கப்பட்டது.

அவருடன், திறைசேரி செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகலவும் இந்த விஜயத்தில் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இந்தியப் பயணம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# "யாழ்.கல்விக்கண்காட்சி-2022"

## உயர் கல்வி மற்றும் துறைசார் வழிகாட்டல் கண்காட்சி யாழ்.வலம்புரி ஹோட்டலில் நடைபெறவுள்ளது

JAFFNA EDUCATION FAIR 2022
Your Future Begins Here...

விளம்பர விவரணம்

"யாழ்.கல்விக் கண்காட்சி 2022" எனும் உயர் கல்வி மற்றும் துறைசார் வழிகாட்டல் கண்காட்சி, எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் மற்றும் 12 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், வலம்புரி ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வானது, வட மாகாணத்தில் நடைபெறவுள்ள சர்வதேச தரத்திலான ஒரேயொரு உயர் கல்விக் கண்காட்சி என்பது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்லாது, உலகத் தரத்திலான உயர்கல்வி வாய்ப்புகளை வடபிராந்திய மாணவர்களுக்கு ஏற்படுத்தித் தருவதையும், இலங்கையில் கிடைக்கக் கூடிய பல்வேறு உயர் கல்வித் தெரிவுகளையும் தொழில் துறைசார் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ள வழிவகை செய்வதையும் இலக்காகக் கொண்டே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற அதி சிறப்பு வாய்ந்த நிகழ்வுகளை இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் நடத்தி வரும் 'எவல்யூஷன் இவன்ட்ஸ்' நிறுவனம் ஒழுங்கு செய்திருக்கும் 'யாழ்.கல்விக் கண்காட்சி 2022' என்ற இந்த நிகழ்வில், 35 இற்கும் மேற்பட்ட உயர்கல்வித்துறையின் பல்வேறு நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளன.

அத்துடன், மாணவர்களுக்கு வழிகாட்டும் ஆலோசனை மையங்களும் அமைக்கப்படவுள்ளன. இவையனைத்துக்கும் மேலாக, மாணவர்கள் தமக்குப் பொருத்தமான துறைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளத் தேவையான ஆலோசனைகள் அடங்கிய இரண்டு கருத்தரங்குகளும் நடைபெறவுள்ளன.

இவ்விரண்டு கருத்தரங்குகளிலும் பல்வேறு தொழிற்றுறை வல்லுநர்களும் ஆலோசகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். இத்தனை சிறப்புகளும் வாய்ந்த இந்தக் கண்காட்சியில் உயர் கல்வியை நிறைவு செய்த மாணவர்கள், பாடசாலை இடைவிலகல் மாணவர்கள், இளம் பிரதிநிதிகள் மற்றும் பெற்றோர் என சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

உயர்தரப் பரீட்சைகளை நிறைவு செய்தவர்களுக்கு இந்தக் கண்காட்சி ஒரு அரிய வாய்ப்பை ஏற்படுத்தித்தரவுள்ளது. தமது பெற்றோர் சகிதம் இக் கண்காட்சியில் கலந்து கொள்வதன் மூலம், இலங்கையில் உள்ள 20 இற்கும் மேற்பட்ட முன்னணி உயர்கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து, அந் நிறுவனங்களின் கல்வி ஆலோசகர்களுடன் கலந்துரையாடி, தமக்குப் பொருத்தமான உயர்கல்வித்துறையைத் தெரிவு செய்து கொள்ள முடிவதுடன், தமது வருங்கால கனவுத்துறைகளில் இணைந்து பணியாற்றும் வாய்ப்பையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இது தவிர, தமது உயர் கல்வியை கனடா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ரஷ்யா, சீனா, இந்தியா, மலேசியா போன்ற வெளிநாடுகளில் பெற்றுக்கொள்வதில் ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் இளம் மாணவர்கள் மற்றும் மேற்படி நாடுகளுக்குப் புலம் பெயர்வதில் ஆர்வமுள்ளவர்களும் இக் கண்காட்சிக்கு வருகை தருவதன் மூலம், தகுதி வாய்ந்த, பெறுமதிமிக்க கல்வி ஆலோசகர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும் புலம்பெயர்வது குறித்த ஆலோசனைகளையும் வல்லுநர்கள் வாயிலாகப் பெற்றுக் கொள்ளலாம்.

தொழில் புரியும் பிரதிநிதிகள் மற்றும் தமது இளநிலைப் பட்டப்படிப்புகளை நிறைவு செய்திருக்கும் இளநிலைப் பட்டதாரிகள் மற்றும் முதுநிலை பட்டப் படிப்புகளுக்கான வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளக் காத்திருப்பவர்கள் மற்றும் தொழில் ரீதியான தகுதிகளை மேம்படுத்திக்கொள்ள விரும்புபவர்களும் கூட இந்தக் கண்காட்சியில் கலந்து கொள்வதன் மூலம், அவர்களுக்குத் தேவையான அனைத்து விபரங்களையும் பெற்றுக்கொள்ள முடிவதுடன், கண்காட்சியிலேயே விசேட கட்டணச்சலுகையுடன் தாம் விரும்பும் துறைகளில் தம்மைப் பதிவுசெய்து கொள்ளும் வசதிகளும்ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கண்காட்சிக்கு வருகை தரும் மாணவர்களுக்கு, தகவல் தொழில்நுட்பம் (IT), மென்பொருள் பொறியியல் (Software Engineering), கணனி அறிவியல் (Computer Science), வியாபார முகாமைத்துவம் (Business Management), பொறியியல், சட்டம், கணக்கியல் மற்றும் நிதியியல், மருத்துவம், உளவியல், கட்டடக்கலை (Architecture), சந்தைப்படுத்தல் மற்றும் எண்மிய சந்தைப்படுத்தல் (Digital Marketing) உள்ளிட்ட பல்வேறு துறைகளில், இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை, முன்னணி பல்கலைக்கழகங்களில் இருந்து பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும், கண்காட்சியில் தம்மைப் பதிவு செய்து கொள்பவர்களுக்காக வழங்கப்படவுள்ள விசேட புலமைப் பரிசில்களையும் கட்டணக் கழிவுகளையும் தமதாக்கிக்கொள்ள முடியும். மேலும் வெளிநாட்டுக் கல்வித் தெரிவுகள், நம்பகமான வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் அனுமதி வாய்ப்புகள் என்பவற்றையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நிகழ்வானது, யாழ்ப்பாணம், வலம்புரி ஹோட்டலில் எதிர்வரும் மார்ச் 11 ஆம் மற்றும் 12 ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணி முதல் 6 மணிவரை நடைபெறவுள்ளது. எந்த விதக் கட்டணமும் இன்றி, இலவசமாக நடத்தப்படவுள்ள இந்தக் கல்விக் கண்காட்சியில், மாணவர்களும் அவர்தம் பெற்றோரும் கலந்து கொண்டு, இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை, 077 343 6927 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக 'எவல்யூஷன் இவென்ட்ஸ்' நிறுவனத்தைத் தொடர்பு கொள்ள முடியும். (நி)

# இன்று ஒரு தகவல்

## ஊர் வாயை மூட முடியுமா?

உண்மையில்லாதவற்றையும் , சிறியவற்றைப் பெரிதாக்கியும் உங்களைப் பாதிக்கும் வகையிலும் சிலர் தவறாகப் பேசி வருகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இவர்களது வாயை எப்படி அடக்குவது அல்லது மூடுவது?

இத்தகையவர்கள் உங்களுடைய உண்மையான எதிரிகளாய் இருந்தால் , நேர் எதிரான முயற்சிகள் எதையும் எடுக்காதீர்கள். அத்தகைய முயற்சிகள் வம்புவழக்கில்தான் போய்முடியும்.

நம்முடைய எதிரிகளின் முயற்சிகளை நாம் பொருட்படுத்தாமல் இருக்கிறோம். நாம் நம் மனதளவில் பாதிக்கப்படாமல் இருக்கிறோம் என்று தெரிந்தாலே எதிரிகள் அடங்கி ஒடுங்கி விடுவார்கள். வேறு முயற் சிகள் தேவையில்லை.

நீங்கள் அவற்றால் உண்மையில் பாதிக்கப்பட்டிருந்தாலும், வெளியில் காண்பித்துக்கொள்ளக் கூடாது. காண்பித்தாலோ முடுக்கப்பட்ட இயந்திரமாய் அவர்கள் செயற்பட ஆரம்பித்துவிடுவார்கள்.

எதிரிகள் மட்டுமல்லாமல் நம்முடன் பழகுபவர்களே இத்தகைய செயல்களில் ஈடுபட்டிருக்கின்றார்களே, இது ஏன்?

கண்ணெதிரில் உரிய நபர் இல்லையென்றவுடனேயே கருத்துச் சுதந்திரத்தோடு பேச ஆரம்பித்துவிடுவது மனித இயல்பு.

உங்களைப் பற்றித் தவறாகப் பேசியவர்களைக்கூட வாய் நிறையப் பாராட்டி விட்டு, என்னைப் பற்றி இப்படிச் சொன்னதாகக் கேள்விப்பட்டேன்; ஆனால் நான் நம்பவில்லை. நீங்கள் அவ்வாறெல்லாம் சொல்லக்கூடிய தன்மை படைத்தவரே அல்லர் என்ப தில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு என்ற தொனியில் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்.

அவர்கள் முகம் போகும் போக்கைப் பார்க்க வேண் டுமே!

அதோடு, அவர்களது போக்கும் மாறும்.

அதை விட்டு விட்டு,

நீங்கள் அப்படிச் சொன்னீர்களாமே? எந்த ஆதார த்துடன் சொன்னீர்கள்? இந்த வேலையெல்லாம் என்னிடம் வேண்டாம் என்று வில்லன் பாணியில் பேசினால்–

அவர்கள் பணி இன்னும் தீவிரமடையும்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு சிறந்த வழி இருக் கிறது.

அது, உங்களைப் பற்றி உங்களைச் சுற்றியவர்களிடம் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவது.

அதாவது,

நீங்கள் ஒரு தவறான செயலைச் செய்ததாக உங்களுடன் இரத்த உறவு கொண்ட ஒருவரிடமோ உங்கள் நண்பரிடமோ ஒருவர் சொன்னால்–

இருக்கவே இருக்காது . அத்தகைய செயல்களை யெல்லாம் நீங்கள் ஒருக்காலும் செய்திருக்க மாட் டீர்கள் என்று அவர்கள் நம்பிக்கையுடன் எதிர்வாதம் செய்ய வேண்டும். அந்த அளவுக்கு உங்களால் ஓர் அசைக்க முடியாத நம்பிக்கையை உங்களைச் சுற்றியவர்களிடம் ஏற்படுத்திவிட முடியுமானால் –

ஊர் வாயைப் பற்றி நீங்கள் கவலை கொள்ள வேண்டியதில்லை.


ஊர் வாய் சும்மா இருக்காது. ஆனால்– அவற்றின் புலம்பல்களைச் செல்லாக் காசுகளாக ஆக்கி விடக்கூடிய திறமை நம்மிடம் இருக்கிறது.

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## சூரியனும் நிலாவும் வானத்தில் இருப்பது ஏன்?



பல ஆண்டுகளுக்கு முன்பு சூரியனும் தண்ணீரும் மிக நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள். இருவருமே ஒன்றாக பூமியில் வசித்தார்கள். சூரியன் அடிக்கடி வந்து தண்ணீரைப் பார்த்துவிட்டுப்போகும். ஆனால், தண்ணீர் சூரியனைப் பார்க்கப் போனதே இல்லை.

ஒருநாள் சூரியன் தண்ணீரிடம் கேட்டது. "ஏன் நீ இதுவரை ஒரு தடவைகூட என்னுடைய வீட்டுக்கு வரவில்லை?" என்றது. பதில் கூறிய தண்ணீர், "உன்னுடைய வீட்டில் இடம் பத்தாது. நான் என்னுடைய எல்லா உறவினர்களுடனும் வந்தால் நீயே உன் வீட்டை விட்டு வெளியே போய் விட வேண்டிய நிலை வந்துவிடும்" எனச் சொன்னது. தண்ணீர் மேலும் சொன்னது... "உன் வீட்டுக்கு நான் வர வேண்டும் என்றால் நீ மிகப் பெரிய பரப்பில் உன் வீட்டின் சுற்றுச்சுவரைக் கட்ட வேண்டும். கண்டிப்பாக நிறைய இடம் தேவைப்படும். என்னுடைய எண்ணற்ற உறவினர்கள் எல்லோருக்கும் உன் வீட்டுக்குள் இடம் இருக்க வேண்டும்".

சூரியன் தண்ணீர் சொன்னபடி ஒரு பெரிய விரிவான பரப்பளவில் வீட்டு சுற்றுச்சுவரை கட்டுவதாக உறுதி சொன்னது. பின் தன் வீட்டுக்குச் சென்றது. சூரியனின் மனைவியான நிலா கதவைத் திறந்து சூரியனை மகிழ்ச்சியுடன் வரவேற்றது. சூரியன் நிலாவிடம் தன் நண்பனிடம் மிகப் பெரிய இடவசதியுடன் வீட்டுக்கு சுற்றுச்சுவரைக் கட்டுவதாக கூறியிருப்பதாகத் தெரிவித்தது. அப்போது தான் என் நண்பன் நம் வீட்டுக்கு வருவான் என்றது.

மறுநாளிலிருந்து சூரியனும் நிலாவும் சேர்ந்து மிகமிகப் பெரியதாக நிறைய நிறைய இடம் விட்டு பரந்து விரிந்த சுற்றுச்சுவரைக் கட்டியது. சுவர் கட்டி முடிக்கப்பட்டதும் மறுநாளே தண்ணீரை தன் வீட்டுக்கு வருமாறு அழைத்தது.

தண்ணீர் தன் எண்ணில் அடங்காத உறவினர்களுடன் சூரியனின் வீட்டுக்கு வந்து, "உன் வீட்டில் எல்லோருக்கும் இடம் இருக்கிறது தானே?" என்று கேட்டுக்கொண்டது.

"ஆம். இருக்கிறது நண்பா...உள்ளே வரலாம்" என்றது சூரியன். சிறிது நேரத்திலேயே சூரியனின் வீட்டில் மூட்டளவு தண்ணீர் நிறைந்து விட்டது. அப்போதும் தண்ணீர் சூரியனைக் கேட்டது... "இன்னும் நிறைய இடம் இருக்கிறதல்லவா?" "ஆம்" என்று சூரியன் சொன்னது. இன்னும் நிறையத் தண்ணீர் வீட்டுக்குள் வந்தது.

ஒரு மனிதனை மூழ்கடிக்கும் உயரத்துக்குத் தண்ணீர் சூரியனின் வீட்டுக்குள் நிறைந்துவிட்டது. அப்போது, "என் உறவினர்கள் இன்னும் உள்ளே வரலாமே" எனக் கேட்டது தண்ணீர். சூரியனும் நிலாவும் ஒரே நேரத்தில் "ஆம்" என்றன. தண்ணீர் மேலும் வீட்டுக்குள் பாய்ந்து வந்து கொண்டே இருந்ததால், சூரியனும் நிலாவும் வீட்டின் கூரையில் தொத்திக் கொண்டு தொங்கின. மறுபடியும் தண்ணீர் சூரியனிடம் ஒரே கேள்வியைக் கேட்டது.

சூரியன் மீண்டும் ஒரே மாதிரி பதில் சொன்னதால் தண்ணீர் இன்னும் இன்னும் வீட்டுக்குள் நிரம்பியது. விரைவாக தண்ணீர் சூரியனின் வீட்டுக்கூரைக்கு மேல் நிறைந்து வழிய ஆரம்பித்து விட்டது. இருக்க வேறு இடம் இல்லாமல் சூரியனும் நிலாவும் வானத்துக்குப் போய் விட்டன. அன்று முதல் அவை அங்கேயே தங்கி விட்டன.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்

### வில் முறிவு



சிவதனுசு சீதையைப் போலவே தக்க வீரனின் கை படாமல் காத்துக் கிடந்தது. வில்லை முறிக்கும் விழாவைக் காண நாட்டவர் வந்து குழுமினர். "புதியவன் ஒருவன் வருகை தந்திருக்கிறான்" என்ற செய்தி எங்கும் பரவியது. "இந்த முற்றிய வில்லால் கன்னியும் முதிர்ந்து போக வேண்டிய நிலை ஏற்படுமோ?" என்று பலரும் அஞ்சினர்.

'இந்த வில்லை முறிப்பவர் முல்லைக் கொடியாளை மணக்கலாம்' என்று முன்னுரை கூறினான் சனகன். வாய்ப்புக்காகக் காத்திருந்த வாலிபன் முனிவரைப் பார்த்தான்; அவர் இவனைப் பார்த்தார்; விழியால் குறிப்புக் காட்டி 'அதை முறிக்க' என அறிவிப்புச் செய்தார். அவன் வில்லை எடுக்கச் செல்பவனைப் போல அதை நோக்கி நடந்தான். "இந்த வில்லை இவன் எடுப்பானா; எடுத்தால் இதை முறிப்பானா?" என்று எதிர்பார்த்திருந்த, அவையோர் வைத்த விழி வாங்காமல் அவனையே பார்த்து இருந்தனர். "இவன் எப்படி எடுப்பான்?" எடுத்தால் வில் முறியுமா, அவன் இடுப்பு முறியுமா?" என்று பார்க்கக் காத்துக் கிடந்தனர். அவன் சென்ற வேகம், எடுத்த விரைவு, அதை முறித்த ஓசை எல்லாம் கண்மூடிக் கண் திறப்பதற்கு முன் தொடர் நிகழ்ச்சிகள் ஆயின.

எடுத்தது கண்டவர் இற்றது கேட்டனர். ஓசைதான் முடிவை அவர்களுக்கு அறிவித்தது. அவன் வில்லை வளைத்ததையும், நாண் பூட்டியதையும், அவர்கள் காணவே இல்லை. முறிந்த ஓசையை மட்டும் கேட்டுச் செய்தி அறிந்தனர்.

அது வளைக்கும் போதே இரண்டாக முறிந்து விட்டது. அப்பேரொலி திக்கெட்டும் எட்டியது. சீதையின் செவிகளையும் எட்டியது. அவளுக்கு அது மன முரசாக இரட்டியது. நீலமாலை என்னும் பெயருடைய பேரழகி அவள் தோழி சீதையிடம் செய்தி சொல்ல ஓடோடிச் சென்றாள்.

### மக்கள் மகிழ்ச்சி

"கோமுனிவனுடன் வந்த கோமகன்; நீல நிறத்தவன்; தாமரைக் கண்ணன்; அவன்தான் அந்த வில்லை முறித்தான் என்று நீலமாலை சொல்ல அதைக் கேட்ட சானகி, அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை என்னும்படி ஆகியது.

தான் உப்பரிகையில் இருந்து கண்டவனே கொண்டவனாக வரப் போகிறான் என்பதில் அவள் கொண்ட மகிழ்ச்சி இரட்டிப்பு ஆகியது. அவள் பன்மடங்கு பொலிந்த முகத்தினள் ஆயினள். நாட்டு மக்கள் இராமன் நலம் கண்டு வியந்தனர்.

"நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்" என்று பாராட்டினர். "சீதையும் இராமனுக்கேற்ற துணைவி" என்று அவள் மாட்சிகளைப் பேசினர்.

இராமன் தம்பி இலக்குவனைக் கண்டு வியந்து பேசினர்; "தம்பியைப் பாருங்கள்" என்று சுட்டிக் காட்டினர்; அந்த நகருக்கு இவர்களை அழைத்து வந்த அருந்தவ முனிவராகிய விசுவாமித்திரருக்கு நன்றி நவின்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்வினை தன்னைச் சுடும்,
ஓட்டப்பம் வீட்டைச் சுடும்.
– பட்டினத்தார்.

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொதுமக்களைப் பாதுகாப்பது தவிர்க்க முடியாத போர்த் தர்மம்

உக்ரைன் மீது கடும் போர் தொடுத்துள்ள ரஷ்யா இன்னும் ஒரு சில நாட்களுக்குள் உக்கிரனைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடும் என உலக நாடுகள் கருதுகின்றன.

உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தும் வரை ரஷ்யாவுக்கு எச்சரிக்கை செய்து கொண்டிருந்த அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள்; தாக்குதல் தொடுக்கப்பட்டதும் வாலைச் சுருட்டிக் கொண்டதுபோல மௌனமாகிவிட்டன.

அதற்கும் மேலாக, நேட்டோ அமைப்பில் உக்ரைன் அங்கத்துவம் பெறாத காரணத்தால் நேட்டோ நாடுகள் ரஷ்யா மீது எதிர்த் தாக்குதல் நடத்த முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆக, நேட்டோ நாடுகளுடன் சேர ஆசைப்பட்டு சொந்த நாட்டை போரில் அழித்ததைத் தவிர, வேறு எதனையும் உக்ரைன் நாட்டு ஜனாதிபதியால் செய்யமுடியவில்லை.

தவிர, தங்கள் நாட்டின் மீது ரஷ்யா போர் தொடுத்தால் அமெரிக்கா பார்த்துக் கொண்டிராது என்று நம்பிய உக்ரைனுக்கு இப்போது உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்ற தத்துவம் புரிந்திருக்கும்.

இவைஒருபுறமிருக்க, உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தத் தொடங்கியதும் உக்ரைன் நாடு பற்றிய விபரிப்புகளில் சர்வதேச ஊடகங்களும் சமூகவலைத்தளங்களும் ஈடுபட்டன.

அதில் உக்ரைன் பற்றிப் பல விடயங்களை அறிய முடிந்தது.

இந்த அறிதல் எமக்குப் புதியதாக இருந்தாலும் உக்ரைன் நாடு பற்றிய நம் மனப்பதிவு வேறு.

அதாவது இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது கொடும் போர் நடத்திய காலங்களில் உக்ரைன் நாட்டில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட போர் விமானங்களும் உக்ரைன் நாட்டு விமான ஓட்டிகளும் எங்கள் மண்ணில் குண்டு போட்டன என்பதே எங்களின் மனப்பதிவு.

ஆம், இலங்கை ஆட்சியாளர்களுக்கு கூலிப்படையாக இருந்த உக்ரைன் நாட்டுப் படையினர் எங்கள் தமிழ் மக்களின் தலைகளில் குண்டுகளைப் போட்டனர் என்பது இன்றுவரை நம் ஆழ்மனப் பதிவு.

அந்தப் பதிவுகளைக் கடந்து – அதற்குள் இருக்கக்கூடிய எம் இழப்புக்களைத் தாண்டி இப்போது உக்ரைன் மீது ரஷ்யப் படைகள் தாக்குகின்ற சம்பவத்தை அறியும்போது அந்தோ! போரின் கொடுமைகளை உக்ரைன் நாட்டு மக்கள் அனுபவிக்கின்றனரே என்ற வேதனை எம் இதயங்களை வறுத்தெடுக்கின்றன.

அந்த கழிவிரக்கம் ஓ! இறைவா உக்ரைன் நாட்டு மக்களைக் காப்பாற்று என்று நம் கரங்களைக் குவிய வைக்கின்றன.

கூடவே எந்த நாட்டில் போர் நடந்தாலும் பொதுமக்களைக் காப்பாற்றுவதுதான் தவிர்க்கக் கூடாத போர்த் தர்மம் என்பதை போரில் ஈடுபடுபவர்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

# யாழ். மாநகர சபைக்குட்பட்ட புராதன சின்னங்கள் புனரமைப்பு

## முதல்வர் மணிவண்ணன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட புராதன சின்னங்கள் கொடையாளிகளின் நிதியில் விரைவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

நல்லூர் இராசதானியின் தோரணவாசல் புனருத்தாபனம் செய்வதற்கான ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாண மரபுரிமை மையம் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசியர் ப. புஸ்பரட்ணம் மற்றும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் உபதலைவர் பேராசிரியர் ரவிராஜ் தலைமையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல நாட்களின் பின்னர் யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள புராதன சின்னங்களில் ஒன்று இன்றைய தினம் (நேற்று) பாதுகாத்து பேணப்படுவதற்காக புனரமைப்பு செய்வதற்காக ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதேபோன்று யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட யமுனா ஏரி, மந்திரிமனை போன்ற பகுதிகளும் விரைவில் புனருத்தாபனம் செய்யப்பட்டு எமது தமிழர்களின் உரிமையை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்தோடு இந்த வேலைத் திட்டங்களுக்கு தொல்பொருள் திணைக்களம் தன்னுடைய பூரண ஒத்துழைப்பினை வழங்கி உள்ளது. எனவே எதிர்வரும் நாட்களில் யாழ். மாநகர சபைக்குட்பட்ட புராதன சின்னங்கள் அனைத்தும் புனரமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-104)

# பளை நகர்ப்பகுதியில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(பளை)

பளை நகர்ப்பகுதி A9 வீதியில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பளை நகரப் பகுதிக்கு அருகாமையில் நேற்று அதிகாலை 1.00 மணியளவில் ஏ9 வீதியில் ஒருவர் மயங்கிய நிலையில் கிடப்பதை பொதுமக்கள் அவதானித்துள்ளனர். உடனடியாக 1990 அவசர நோயாளர் காவு வண்டிக்கு அழைப்பு விடுத்து பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை குறித்த நபர் இறந்து பல மணி நேரமாகி விட்டதாக கடமையில் உள்ள வைத்தியர் தெரிவித்துள்ளார்.

இறந்தவர் பளை முல்லையடியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளந்திரையன் என்பவர் ஆவார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-316)

# எதிர்வரும் வாரங்களில் வடக்கு மாகாணத்தில் கனமழைக்கு வாய்ப்பு

எதிர்வரும்-3 ஆம் திகதி வியாழக்கிழமை, 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, மறுநாள் 5 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய நாட்களில் வடக்கு மாகாணம் முழுவதும் கனமழை கிடைக்க வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் நேற்று அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடமாகாணத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை முதல் 5 ஆம் திகதி சனிக்கிழமை வரையில் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இது மாதிரிகளின் (Models) அடிப்படையிலேயே கணிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக இக்காலப் பகுதியில் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஏற்படுவதில்லை. எனினும், மாதிரிகள் தாழமுக்கம் உருவாகும் சாத்தியத்தையே வெளிப்படுத்துகின்றன.

தொடர்ச்சியாக நிலைமைகள் அவதானிக்கப்பட்டுப் பிந்திய நிலைமைகள் தொடர்ந்தும் இற்றைப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-18,33)

# நாய் வளர்ப்போர் பதிவு செய்யவேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நாய் வளர்ப்போர் கட்டாயமாக நாய்களை பதிவு செய்யும் நடைமுறையை விரைவில் அமுல்படுத்த உள்ளதாக யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன், மருத்துவ பீடத்தின் ஏற்பாட்டில் யாழ். ஆரோக்கிய நகரம் எனும் தலைப்பிலான கருத்தரங்கத்தில் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாய்களை கட்டுப்படுத்துவதில் யாழ். மாநகர சபை பிரச்சினையை எதிர்நோக்குகிறது. அதாவது தெரு நாய்களை மாநகரசபை பிடித்து வர முடியாது. அதேபோல அவற்றை வைத்து பராமரிக்கக்கூடிய சிறந்த இடங்களும் தற்போதைய நிலையில் இல்லை என்றார். (ம-33)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## பற்றில்லாமல் இருக்க

❖ முக்தி என்றால் முழு சுதந்திரம். தீமைத் தளையிலிருந்தும், அது போலவே நன்மைத் தளையிலிருந்தும் சுதந்திரம் பெறுவது. இரும்புச் சங்கிலியைப் போலவே தங்கச் சங்கிலியும் தளைதான். என் கையில் முள் ஒன்று குத்தியிருக்கிறது. அதை எடுப்பதற்கு இன்னொரு முள்ளையே பயன்படுத்துகிறேன். எடுத்து முடிந்ததும் இரண்டையுமே எறிந்து விடுகிறேன். இரண்டாவது முள்ளை நான் வைத்திருக்க வேண்டிய தேவையில்லை. ஏனெனில் இரண்டும் முட்களே.

❖ அது போலவே தீய இயல்புகள் நல்ல இயல்புகளால் சமன்படுத்தப்பட வேண்டும். நல்ல சம்ஸ்காரங்களின் புதிய அலைகளைப் பாய்ச்சி தீய சம்ஸ்காரங்களை ஏறக்குறைய அவை மறைகின்ற வரையில், ஒடுங்குகின்ற வரையில், மனதின் ஒரு மூலையில் கட்டுப்படுத்தப்படும் வரையில் நீக்க வேண்டும். அதற்குப் பிறகு நல்ல இயல்புகளையும் வெற்றி கொள்ள வேண்டும். இவ்வாறாகிய பற்று 'பற்றின்மை' ஆகிறது.

❖ செயற்படு! ஆனால் அந்தச் செயலோ, எண்ணமோ மனதில் ஆழ்ந்த பதிவை உண்டாக்காமல் பார்த்துக்கொள். அலைகள் வந்து போகட்டும். உடம்பிலிருந்தும் பெரிய பெரிய செயல்கள் புறப்படட்டும். ஆனால் அவை மனதில் ஆழ்ந்த பதிவு எதையும் உண்டாக்க. அனுமதிக்காதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 06

உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்த)ச் சட்டத்தின் 3ஆ.(1) பிரிவின்படி தேசிய குழுவின் பணிப்பாணையாவது, (2) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு உள்ளூராட்சி அதிகாரசபையின் இடப்பரப்பை வட்டாரங்களாகப் பிரிப்பதற்காக அமைச்சருக்கு விதப்புரை செய்தலும் ஒவ்வொரு வட்டாரத்தினதும் எல்லைகளைத் தீர்மானித்தலும் அத்தகைய வட்டாரம் ஒவ்வொன்றினதும் எல்லைகளை நிர்ணயிப்பதும் அத்தகைய வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் பெயர் ஒன்றையும் இலக்கம் ஒன்றையும் குறித்தொதுக்குவதும் ஆகும்.

இதன் பிரகாரம் நாடு பூராக இருந்த 341 உள்ளூராட்சி அதி கார சபைகளும் மொத்தம் 5092 வட்டார உறுப்பினர்களைக் கொண்ட ஒரு உறுப்பினர் வட்டாரங்கள், இரு உறுப்பினர்கள் வட்டாரங்கள், மூன்று உறுப்பினர்கள் வட்டாரங்கள் எனப் பிரிக்கப்பட்டன.

உள்ளூராட்சி அதிகார சபைகளில் 2012 வரையில் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கிடையே உறுப்பினர்களின் எண்ணிக்கையில் சமநிலை காணப்படவில்லை. இதனால் 2015 இல், சபைகளுக்கு வட்டாரங்களுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் போதும் (சனத்தொகை விகிதாசாரத்திற்கேற்ப) சமநிலை காணப்படாமல் தீர்மானிக்கப்பட்டு விட்டது.

இதனால் பல உள்ளூராட்சி அதிகார சபைகளில் உள்ள மக்கள் தங்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டுள்ளதாக கூறுகிறார்கள். இக்குறைபாடு இதுவரையில் சரிசெய்யப்படவில்லை.

இக்குழுவினால் தயாரிக்கப்பட்ட "தேசிய எல்லை வரையறைக் குழுவின் அறிக்கை" 2015 ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி ஜனாதிபதியால் வெளியிடப்பட்டது.

மேற்படி தேசிய எல்லை நிர்ணயக் குழு சமர்ப்பித்திருந்த அறிக்கையில் குறைபாடுகள் இருப்பதாக மைத்திரி-ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசு கருதியதனால் உள்ளூராட்சி அதிகார சபைகள் விடயப் பொறுப்பு அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் அடிப்படையில் அக்குழுவின் அறிக்கையை மீளாய்வு செய்வதற்காக மீளாய்வு குழு ஒன்று 2015 ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

**2012 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள்(திருத்த)ச்சட்டத்தின்படி தேசிய எல்லை நிர்ணயக் குழுவொன்று தாபிக்கப்பட்டது. சட்டத்தில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளைக்கருத்திற்கொண்டு ஒவ்வொரு உள்ளூராட்சி அதிகாரசபையின் இடப்பரப்பை வட்டாரங்களாகப் பிரித்தல் ஒவ்வொரு வட்டாரத்தினதும் எல்லைகளைத் தீர்மானித்தல் அத்தகையவட்டாரம்ஒவ்வொன்றினதும் எல்லைகளை நிர்ணயிப்பதும் எல்லை நிர்ணயக் குழுவின் பணியாக இருந்தது.**

**நாடு பூராக இருந்த 341 உள்ளூராட்சி அதிகார சபைகளும் மொத்தம் 5092 வட்டார உறுப்பினர்களைக் கொண்ட ஒரு உறுப்பினர் வட்டாரங்கள், இரு உறுப்பினர்கள் வட்டாரங்கள், மூன்று உறுப்பினர்கள் வட்டாரங்கள் எனப் பிரிக்கப்பட்டன.**

மீளாய்வுக்குழுவினால் பரிந்துரைகள் வழங்க காலதாமதம் ஏற்பட்டது. மூன்று மாதத்திற்குள் தமது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டிருந்தாலும் 2017 ஜனவரி 17 வரை அவர்களது அறிக்கை தாமதப்படுத்தப்பட்டது. அக்குழுவின் மீளாய்வு அறிக்கை 2017 பெப்ரவரி 17 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

2017 பெப்ரவரி 17 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மீளாய்வுக் குழுவின் அறிக்கையில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்துவதற்கு உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 அதிகார சபை) 3(ஈ) பிரிவின் கீழ் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கமைய உள்ளூராட்சி மன்ற வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பில் செப்டெம்பர் 2017இல் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக் குழுவின் அறிக்கை வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2017.12.02 வெளியிடப்பட்டது.

### உள்ளூராட்சி சபைகளின் மன்ற கலப்பு முறைத் தேர்தல்கள்

2018ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி, கலப்பு முறையில் தேர்தல்கள் நடந்தன. போட்டியிட்ட அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் ஒவ்வோர் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு மொத்த உள்ளூராட்சி அதிகார சபை அதிகார பிரதேசத்தினுள் பெற்றுக் கொள்ளும் மொத்த வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக அவர்களின் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய இம்முறைமை 100% விகிதாசார முறையின் அடிப்படையில் உறுப்பினர்கள் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்ற ஒரு முறையாகவே உள்ளது.

**போட்டியிட்ட அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் ஒவ்வோர் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு மொத்த உள்ளூராட்சிஅதிகார சபை அதிகார பிரதேசத்தினுள் பெற்றுக் கொள்ளும் மொத்த வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக அவர்களின் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய இம்முறைமை 100% விகிதாசார முறையின் அடிப்படையில் உறுப்பினர்கள் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்ற ஒரு முறையாகவே உள்ளது.**

அதேபோன்று உறுப்பினர்களை நியமனம் செய்கின்ற போது வட்டாரத்திற்காக போட்டியிட்டு வெற்றீட்டிய அனைத்து வேட்பாளர்களும் கட்டாயமாக அந்த வட்டாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அச்சபைக்கு நியமனம் செய்யப்படுகின்றனர். அதற்கமைய வட்டாரத்திற்கு பொறுப்பு கூறுகின்ற உறுப்பினரொருவர் இம்முறைமையின் மூலம் கட்டாயமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.

ஏதேனும் ஒரு கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு விகிதாசாரமாகக் கிடைக்க வேண்டிய உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கையை விட அவர்கள் வெற்றியீட்டியுள்ள வட்டாரங்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படின் வெற்றியீட்டிய வட்டாரத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு மேலதிகமாக உரித்துப் பெறும் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கைக்காக மேலதிக நபர்களின் பட்டியலிலிருந்து அல்லது வேட்பாளர்களின் பட்டியலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**அதே நேரத்தில் உறுப்பினர்களை நியமனம் செய்கின்ற போது வட்டாரத்திற்காக போட்டியிட்டு வெற்றீட்டிய அனைத்து வேட்பாளர்களும் கட்டாயமாக அந்த வட்டாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அச்சபைக்கு நியமனம் செய்யப்படுகின்றனர்.**

அதேபோன்று ஒரு கட்சி அல்லது சுயேச்சைக் குழு அவர்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கமைய விகிதாசாரமாக உரித்துடைய உறுப்பினர் எண்ணிக்கையை விட வட்டார மட்டத்தில் வெற்றியீட்டி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமெனில், அந்த அதிகரித்த எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையொன்றினால் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்க முடியும்.

மேலும் அதிகரிக்கின்ற ஆசனங்களின் எண்ணிக்கை தொங்கு ஆசனம் (Over Hang) என அழைக்கப்படும். இவ்வாறு உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கவில்லையெனில், ஏனைய அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக அவர்களுக்கு உறுப்பினர் பதவிகளை வழங்குவதற்கான சாத்தியப்பாடு இல்லையென்பதால், அவ் வாக்காளர்களுக்கு ஏற்படக்கூடிய அநீதி தவிர்ப்பதற்காக தொங்கு ஆசனம் (Over Hang) இச்சட்டத்தினுள் தோன்றியுள்ளது.

இதன் பிரகாரம் இத் தேர்தலில் 385 உறுப்பினர்கள் தொங்கு ஆசன முறையில் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

**அதேபோன்று ஒரு கட்சி அல் லது சுயேச்சைக் குழு அவர் கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கமைய விகிதாசாரமாக உரிததுடைய உறுப்பினர் எண்ணிககையை விட வட்டார மட்டத்தில் வெற்றியீட்டி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமெனில், அந்த அதிகரித்த எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கை யொன்றினால் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்க முடியும்.**

**மேலும் அதிகரிக்கின்ற ஆசனங்களின் எண்ணிக்கை தொங்கு ஆசனம் (Over Hang) என அழைக்கப்படும். இதன் பிரகாரம் உள்ளூராட்சி அதிகார சபை தேர்தலில் 385 உறுப்பினர்கள்தொங்கு ஆசன முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்.**

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26 பேர்...

டுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 16,142ஆக அதிகரித்துள்ளது. (ம)

## +1,286...

யாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 643,072ஆக அதிகரித்துள்ளது. (ம)

## இரவு நேர...

ளில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என பொதுப் பயன்பாட்டுத் திணைக்களத்தின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, இன்றைய தினம் ஏ.பீ.சி குழுக்களுக்கு பகல் நேர மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ள நிலையில் அது 3 மணித்தியாலங்களாக குறைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், ஏனைய குழுக்களுக்கு இரண்டரை மணித்தியாலங்கள் குறித்த காலப்பகுதியில் மின்வெட்டு அமுல் படுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாட்டுத் திணைக்களத்தின் தலைவர் ஜனக ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

27 ஆம் திகதி ஏ.பீ.சி குழுக்களை தவிர ஏனைய குழுக்களுக்கு எவ்வித மின்வெட்டும் அமுல்படுத்தப்படாது எனவும், ஏ.பீ.சி குழுக்களுக்கு இரண்டரை மணித்தியால மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம)

## பயங்கரவாத...

அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பிரெஞ்சுக் குடியரசின் செனட்டில் இடம் பெற்ற பிரான்ஸ் - இலங்கை நட்புறவுக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடனான காலை உணவு சந்திப்பில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு இலங்கையின் திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கும்போதே பீரிஸ் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமல் போனவர்களுக்கான அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், நிலையான அபிவிருத்தி 16 இலக்குகள் பேரவை மற்றும் இலங்கை மனித உரிமைகள் பேரவை போன்ற உள்நாட்டு பொறிமுறைகளின் முன்முயற்சிகள் குறித்து அவர் கருத்துத் தெரிவித்தார்.

உச்ச நீதிமன்றத்தின் தற்போதைய நீதியரசர் ஒருவரின் தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கை தற்போது ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் நீண்டகால நடவடிக்கையை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவொன்று தமது பணியை நிறைவு செய்யவுள்ளதுடன், அவர்களது அறிக்கை முன் கூட்டியே சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்ட 42 வருடகால பயங்கரவாத தடைச்சட்டத்திற்கான திருத்தங்களுக்கு அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மார்ச் முதல் வாரத்தில் விவாதிக்கப்படவிருப்பதாக அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார். (ம)

## மும்முனையிலும்...

உக்ரைன் மீது ரஷ்யா நேற்று 2ஆவது நாளாக போர் தொடுத்து வருகிறது. தலைநகர் கீவை குறிவைத்து சரமாரி குண்டு வீச்சு, ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது. முதல் நாள் போரில் உக்ரைன் படைவீரர்கள், பொதுமக்கள் என 137 பேர் பலியானதாக அந்நாட்டு அரசு தெரிவித்தது. இதற்கிடையே, ரஷ்யாவின் தாக்குதலுக்கு உக்ரைன் அரசும் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது.

உக்ரைன் மீது படையெடுத்துள்ள ரஷ்ய இராணுவத்தை சேர்ந்த சுமார் 2,800 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என உக்ரைனின் பாதுகாப்பு துணை அமைச்சர் ஹன்னா மாலியார் கூறினார்.

“உக்ரைன் பிரதேசத்தில் ரஷ்ய கூட்டமைப்பின் திறந்த பெரிய அளவிலான படையெடுப்பின் தொடக்கத்திலிருந்து, நேற்று மாலை வரையான நிலவரப்படி பின்வரும் இழப்புகளை (தோராயமாக) சந்தித்தன: 80 டாங்கிகள் வரை, 516 கவச போர் வாகனங்கள் பல்வேறு வகையான, 10 விமானங்கள், 7 ஹெலிகொப்டர்கள், 2,800 பணியாளர்கள், ” என மலியார் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் இராணுவ வாகனங்களை கைப்பற்றிய ரஷ்ய வீரர்கள், உக்ரைன் ராணுவ வீரர்களின் சீருடையை அணிந்து கைப்பற்றப்பட்ட வாகனங்களில் அதிவேகமாக கீவ் நகருக்குள் நுழைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ரஷ்யாவுக்கு எதிரான போரில் நாங்கள் தனித்து விடப்பட்டுள்ளோம் என உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி மிகவும் உருக்கமுடன் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா மேற்கொண்ட சரமாரியான குண்டு வீச்சு, ஏவுகணை தாக்குதல் காரணமாக உக்ரைன் நிலைகுலைந்து போய் உள்ளது. (ம)

## ஆட்சி...

ரஷ்ய அதிபர் புடின் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார். ரஷ்ய அரசு தொலைக் காட்சியில் நாட்டு மக்களிடம் உரையாற்றிய புடின், உக்ரைனில் தற்போதைய அரசை அகற்றிவிட்டு இராணுவம் ஆட்சி அதிகாரத்தில் அமர வேண்டும் என்றும் அதிகாரத்தை கைப்பற்றும் நிலையில், பேச்சுவார்த்தை மூலம் எளிதான தீர்வை எட்ட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## தாக்குதலை...

ஸ்கி வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிலையில், உக்ரைன் இராணுவம் தாக்குதலை நிறுத்தினால் நாங்கள் பேச்சுவார்த்தைக்கு தயார்என்று ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. உக்ரைனில் 2ஆவது நாளாக ரஷ்யா தாக்குதல் நடத்தி வரும் நிலையில் ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் இதனை அறிவித்துள்ளார்.

அடக்குமுறையில் இருந்து உக்ரைனை மீட்க வேண்டும் என்பதே எங்களின் நோக்கம் எனவும் ரஷ்ய அமைச்சர் செர்ஜிலாவ்ரேவ்தெரிவித்துள்ளார். (ம)

## பொறு...

குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடருக்காக இலங்கை தொடர்பில் அவர் முன்வைத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவமயமாக்கல், இன, மத, தேசியவாதம் என்பன ஜனநாயக நிறுவனங்களை சீர்குலைப்பதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள்ஆணையாளர் மிச்செல் பச்லெட் கூறியுள்ளார்.

சிறுபான்மை மக்களை சிரமப்படுத்துவதன் ஊடாக நல்லிணக்கத்திற்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையான நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் பொறி முறையை செயற்படுத்துவதற்காக பூரண நோக்கத்துடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டியது அவசரத் தேவையாக உள்ளதெனவும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த கால மனித உரிமை மீறல்கள் மீண்டும் நிகழ்வதை தடுப்பதற்காகவும் தண்டனை பெறாதிருப்பதை தடுப்பதற்காகவும் நிறுவன, பாதுகாப்பு துறைகளில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பயங்கரவாத தடை திருத்தச் சட்டமூலம் தொடர்பிலும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கையில் கவனம் செலுத்தியுள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை தாம் ஏற்றுக்கொண்டாலும், இலங்கையின் உத்தேச திருத்தங்கள் சர்வதேச மனித உரிமை பிரகடனங்களுக்கு அமைய போதுமானதாக இல்லை எனவும் மிச்செல் பச்லெட் தெரிவித்துள்ளார். (ம)








































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய...

சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது இலங்கை கைத்தொழில் துறை தொடர்பான முக்கிய கவனம் செலுத்தப்பட்டது என இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எது எப்படி இருந்தபோதிலும் கடந்த காலங்களில் விமல் வீரவன்ஸ கடும் இந்திய எதிர்ப்பு கொள்கையில் செயற்பட்டு வந்தார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் செய்தபோது அதற்கு எதிராக கறுப்பு கொடிகளை ஏந்துமாறு கோரி இருந்தார். இவ்வாறான நிலையில், இந்திய உயர்ஸ்தானிகருடனான இந்த சந்திப்பு முக்கிய விடயம் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)


## சிறுநீரகம் தேவை

36 வயதுடைய பெண் ஒருவருக்கு O+ இரத்த வகையை உடைய சிறுநீரகம் தேவை. (10293)

077 642 1264
076 857 3934
Whatsapp/ Viber :
0033652581658

## உடனடி நிரந்தர வேலைவாய்ப்பு

யாழ்.பல்கலைக்கழக வீதியில் அமைந்துள்ள பெண்களுக்கான அழகுக்கலை நிலையத்திற்கு நிரந்தரமான பெண் ஊழியர் தேவை.
தொழில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் (C-3852)
தொடர்புகொள்ள
077 786 9760

## New SCIENCE UNIVERSE

A/L Physics (நேரடி வகுப்புக்கள்)
MECHANIC
2021 Repeat Batch & 2022
மார்ச் 1 இலிருந்து ஆரம்பமாகிறது
இன்று முதல் அனுமதி வழங்கப்படும்.
(அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை)
0763220916 (Director)
Stanley Road, Jaffna.
Personal & Group Classes
தொடர்பு கொள்ள முடியும். (10381)

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-975/=Kg
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3785)
0768226240 DHL

## கணித, ஆங்கில வகுப்புக்கள்

- தரம் 10, O/L மாணவர்களுக்கானது.
- ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே.
- தனிப்பட்ட கவனிப்புக்கள்.
- மாணவர்களுக்கேற்ற நேரத் தெரிவு.

! இலங்கையில் எவரும் வழங்காத சலுகை !
எம்மிடம் முழுமையாக பயின்று O/L இல் கணிதம் & ஆங்கிலம் சித்தி பெறாவிடின் செலுத்திய முழுப் பணமும் மீள வழங்கப்படும்.
உங்களின் சித்தி எங்களின் வெற்றி
பதிவுகளை 28.02.2022 இற்கு முன்னர் மேற்கொள்ளுங்கள். (10361)
WINSTAR LEARNING CENTER
N0.45, Vembadi street, Jaffna.
077 395 0857

## Vacancy For Accountant

ஸ்ரான்லி வீதியில் அமைந்து இருக்கும் வாகன உதிரிப் பாக விற்பனை நிலையத்திற்கு கணக்காளர் தேவை.
(Accountant or Accounts Trainee)
A/L Commerce, Diploma or degree holders விரும்பத்தக்கது.
தொடர்புகளிற்கு
NST Motors pvt Ltd
No. 179, Stanley Road. Jaffna. 076 567 4930 (10374)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து நிலாவரை புத்தூர் றோட்டில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம். (வாகையடி சந்தி) (10380)
074 269 0854

## IELTS

A course that can change the course of your life!
Improve your vocabulary | Grammar
Spoken | Accent | Personality etc.
IELTS - PREPARATION CENTRE
JAFFNA COLLEGE
UNDERGRADUATE DEPARTMENT
TP : 021 222 0384, 021 222 3382
No. 464, Hospital Road, Jaffna. (C-3845)

## சிறுநீரகம் தேவை

O, B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. (10379)
தொடர்பு
076 239 9874

## கணக்காளர் தேவை (பெண்)

தகைமை: கணனி அறிவு
A/L கொமர்ஸ் விரும்பத்தக்கது. (10348)
077 244 8216

## வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல ஹாட்வெயார் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
Store Keeper
18 - 30 வயதுக்குட்பட்டவர்கள்.
யாழ். நகரத்திற்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. (10355)
076 139 4583
074 174 5273

## இடம் வாடகைக்கு தேவை

யாழ். நகரில் இருந்து 6 km தூரத்திற்குள் பிரதான வீதி ஒன்றில் சிறிய அலுவலகம் ஒன்றிற்கு முற்பணமில்லாமல் (1 month Advance) இடம் வாடகைக்கு தேவை.
தொடர்பு (10376)
076 362 2747

## பணிப்பெண் தேவை

பெண் முதியவர் ஒருவரை பராமரிப்பதற்கு இரவு பகல் இரு நேரமும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
யாழ்ப்பாணம் (10348)
077 244 8216

## வேலையாள் தேவை

மா வறுக்கின்ற நிறுவனத்திற்கு (ஆண், பெண்) வேலையாட்கள் தேவை.
சம்பளம் - 1,500/= இற்கு மேல் (10375)
077 936 1356

# ලංකා සම සමාජ පක්ෂය
# லங்கா சம சமாஜக் கட்சி
# LANKA SAMA SAMAJA PARTY

## பகிரங்க அழைப்பு

13ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை பலப்படுத்தி அதன்மூலம் மாகாண சபையினைப் பாதுகாத்தல்
பொதுக் கருத்துரையாடல்



காலம் - 27.02.2022 (ஞாயிற்றுக்கிழமை)
இடம் - யாழ்.வீரசிங்கம் மண்டபம்
நேரம்- பிற்பகல் 2.00 மணி

தலைமை
லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளர்
பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண பா.உ
வட மாகாண சபையின் கௌரவ தவிசாளர்
கௌரவ சீ.வி.கே.சிவஞானம் அவர்களின் சமுகத்தில்
Hon. Reginald Cooray Fomer Chief Minister,
Western Province Governor
& Former Northern Province Governor,
முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி கௌரவ த.விக்னராஜா அவர்கள்,
பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை
ஆகியோரின் முன்னிலையில்

- இலங்கை தமிழரசுக் கட்சி
- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
- தமிழர் விடுதலைக் கூட்டணி
- ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
- தமிழர் சமத்துவக் கட்சி
- சமூக ஜனநாயகக் கட்சி
- ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
- புளொட் அரசியல் பிரிவு
- சிறிரெலோ அரசியல் அமைப்பு
- தமிழ் மக்கள் கூட்டணி
- அக தேசிய முற்போக்கு கழகம், வவுனியா
- நேசகரங்கள் மக்கள் பணிமனை
- மௌலவி B.A.S சுபியான் அவர்களின் அமைப்பு
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், யாழ்.மாவட்டம்
- அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், யாழ்.மாவட்டம்
- இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்
- தமிழ் முற்போக்கு கூட்டணி
- திரு.பெ.முத்துலிங்கம் அவர்களின் மலையக சிவில் சமூக செயற்பாட்டு அமையம்
- வடக்கு வாழ் இந்திய சமுதாயப் பேரவை
- சிறிலங்கா பொதுஜன பெரமுன
- சிறிலங்கா சுதந்திரக் கட்சி
- ஐக்கிய மக்கள் சக்தி
- ஜனநாயக இடதுசாரி முன்னணி
- இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி
- சோசலிச மக்கள் கட்சி

ஆகியவற்றின் செயலாளர்கள், தலைவர்கள் ஆகியோருக்கு இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கலந்துரையாடலில் கலந்து இனங்களுக்கிடையிலான முரண்பாடு, அரசியல் தீர்வு, மூன்று தசாப்தங்களுக்கு மேலான இருண்டகாலம் முடிவுக்கு வந்து அதன் முடிவில் போராடிப் பெற்ற இந்த மாகாண சபை முறைமையை பாதுகாக்க வாக்குப் பெறும் அரசியலுக்கு அப்பால் மக்களின் ஜனநாயக உரிமைக்காக இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு மேற்குறிப்பிட்ட அரசியல் கட்சிகள், சிவில் தலைவர்கள், கல்விமான்களையும் பொதுமக்களையும் கலந்து கொள்ளுமாறு தோழமையுடன் அழைக்கின்றேன்.
அனைத்து அரசியல் கட்சிகள், சமூக நலன் அமைப்புகள், மதத் தலைவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் தங்கள் கருத்துக்களை முன்வைக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

தோழமையுடன்: பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண பாராளுமன்ற உறுப்பினர்
ஒருங்கிணைப்பு: கலாநிதி சிதம்பரம் மோகன் 077 603 0507
(C-3850)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.